வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05 | 19.09.2024 புதன்கிழமை | இதழ் : 263 | பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## ஓமந்தை விபத்தில் இருவர் பலி!

கோகுலன்

வவுனியா, செப். 19

வீதியில் நின்றவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் அவரும் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவரும் உயிரிழந்தனர்.

வவுனியா - ஓமந்தையில் இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சங்கீதன் (வயது 40), கிளிநொச்சியை சேர்ந்த யோகராசா (வயது 42) ஆகியோரே 11

# செப்ரெம்பர் 21ஆம் திகதி எனது வெற்றி உறுதியானது

## இறுதி பிரசாரத்தில் அறிவித்தார் ரணில்

கொழும்பு, செப்ரெம்பர் 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செப்ரெம்பர் 21 அன்று தனது வெற்றி நிலையானது என அறிவித்ததுடன், அனைத்து குடிமக்களையும் ஒன்றிணைத்து வலுவான பொருளாதாரத்துடன் வளர்ந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தினார். 11



## வங்குரோத்து நிலையிலிருந்து இன்றுடன் மீட்சி

கொழும்பு, செப். 19

இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச பிணைமுறி உரிமையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாகவும் அதன் பின்னர் இலங்கையின் வங்குரோத்து நிலை முற்றாக முடிவடைந்து அனைத்து நாடுகளினதும் ஆதரவு மீண்டும் நாட்டுக்குக் கிடைக்கும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 11

## அச்சுறுத்தல், அழுத்தம் எதுவும் எனக்கு இல்லை

### தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன்



யாழ்ப்பாணம், செப். 19

என்னை வேட்பாளரில் இருந்து விலகுமாறு யாரும் என்னிடம் கேட்கவில்லை. எனக்கு அந்தவிதமான அழுத்தங்களையும் தரவில்லை. நான் போட்டியிடுவதால் சிலருக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். அதற்காக யாரும் எனக்கு அச்சுறுத்தல் விடுக்கவோ, அழுத்தம் தரவோ இல்லை என தமிழ் 11

## திலீபனின் நினைவேந்தலுக்கு தடை கோரிய யாழ்.பொலிஸ்!

### விண்ணப்பம் நீதிமன்றால் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 19

நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள திலீபனின் நினைவுத் தூபிக்கு அருகில் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுப்பதைத் தடை செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, பொலிஸாரினால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பம் நிராகிக்கப்பட்டதுடன் சில நிபந்தனைகளுடன் நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள திலீபனின் நினைவுத் தூபிக்கு அருகில் நினைவேந்தலை முன்னெடுக்கலாம் என நீதிவான் அறிவித்துள்ளார். (அ)

## தமிழ் பொது வேட்பாளருக்கே தமிழர் வாக்களிக்கவேண்டும்!

### மக்கள் பேரெழுச்சி இயக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், தமிழரான நாம் தமிழ் பொது வேட்பாளருக்கே வாக்களிக்கவேண்டும் என பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில்-

தமிழர் மீது திடீர் பாசம் கொண்ட சிங்கள வேடதாரிகள் எமது தேசம் எங்கும் இன்முகத்துடன் வலம் வந்து வாக்கு சேகரிக்கின்றனர். இதில் தமிழராகிய நாம் எந்த சிங்கள வேட்பாளர்களுக்கும் 11

## சங்கு சின்னத்துக்கு மட்டும் தமிழர்களே வாக்களியுங்கள்

### அரியநேத்திரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 19

"தமிழ் பொது வேட்பாளர் பற்றிய தவறான தகவல்கள், வதந்திகளை பரப்ப பல தரப்பினர்களும் திட்டமிட்டுள்ளனர். அதனால் மக்கள் விழிப்பாக இருந்து 21ஆம் திகதி தமது வாக்குகளை தமிழ் பொது வேட்பாளரின் சின்னமாகிய சங்கு சின்னத்துக்கு மாத்திரம் அளிக்கவேண்டும்."

-இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற 11

## தமிழ் அரசின் பிரசாரங்களுக்குள் கவனம் சிதறாது வாக்களியுங்கள்

### தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு

திருமலை, செப். 19

தமிழ் அரசுக் கட்சியின் பிரசாரங்களுக்குள் கவனத்தை சிதறவிடாமல் தங்களின் வாக்குகளை தமிழ் மக்கள் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு அளிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் ஆ. யதீந்திரா நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டவை வருமாறு,

தேர்தல் பிரசாரங்கள் முடிவுறும் நிலையில் தமிழ் 11

## எம் உரிமைகளை வலுவுள்ளதாக்க பொது வேட்பாளரை ஆதரிப்போம்!

### சமூக செயல்பாட்டாளர் அருந்தவபாலன்



யாழ்ப்பாணம், செப். 19

தமிழ்த் தேசத்தைப் பலமாக்கி எமது உரிமைகளை வலுவுள்ளனவாக மாற்றுவதற்கும் இந்தத் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கவேண்டியது அனைவரதும் கடமையாக இருக்கின்றது என சிவில் சமூக செயல்பாட்டாளர் க. அருந்தவபாலன் தெரிவித்துள்ளார். 11

## வாக்களித்தவுடன் உடனே வீடுகளுக்கு செல்லுங்கள்!

கொழும்பு, செப். 19

எதிர்வரும் சனிக்கிழமை ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்த பின்னர் உடனடியாக வீடுகளுக்கு செல்லுமாறு நாட்டு மக்களிடம் தேர்தல் ஆணைக்குழு கேட்டுள்ளது.

காரணமின்றி வாக்குச் சாவடிகளில் அல்லது அருகில் இருக்க வேண்டாம் என்றும் வாக்காளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எந்தவொரு சந்தர்ப்பத்தில் தேர்தல் செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்துவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை 11

## 20 இலட்சம் வாக்குகளால் வெற்றி பெறுவது நிச்சயம்

### மொனராகலையில் நேற்று சஜித்



கொழும்பு, செப். 19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 20 இலட்சம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெறும் என அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெல்மட் திருடப்பட்டமைக்கு எதிராக ரயில் கட்டுப்பாட்டாளர்கள் போராட்டம்!

## அநுராதபுரம் - காங்கேசன்துறை ரயில் சேவைகள் பாதிப்பு

கொழும்பு, செப். 19

**அநுராதபுரம் ரயில் நிலையத்தின் கட்டுப்பாட்டாளர்கள் குழுவொன்று நேற்று வேலை நிறுத்தப்போராட்டத்தை முன்னெடுத்தது. இதனால், அநுராதபுரம் முதல் காங்கேசன்துறை வரையான ரயில் சேவைகள் நேற்று பாதிக்கப்பட்டன.**

ரயில் நிலையத்துக்குச் சொந்தமான வாகன தரிப்பிடத்தில் ரயில்வே கட்டுப்பாட்டாளரின் மோட்டார் சைக்கிளில் இருந்த தலைக்கவசம் அடையாளம் தெரியாத நபரால் திருடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரயில் நிலையத்தில் உரிய பாதுகாப்பு இல்லாதமையே இத்திருட்டுச் சம்பவத்துக்குக் காரணம் எனத் தெரிவித்து ரயில் நிலையத்தின் கட்டுப்பாட்டாளர்கள் குழுவினரால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைநிறுத்தம் காரணமாக அநுராதபுரத்திலிருந்து கிளிநொச்சி வரையான பல ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கடற்றொழிலுக்குச் சென்ற முதியவரை காணவில்லை!

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலுக்கு சென்ற முதியவரை காணவில்லை என ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காரைநகரை சேர்ந்த 74 வயதுடையவரே காணாமல் போயுள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்து கடற்றொழிலுக்காக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை சென்றவர் மாலை வரை வீடு திரும்பாத நிலையில் வீட்டார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மஹியங்கனை வீதியில் விபத்து; ஒன்றரை வயது குழந்தை மரணம்

கொழும்பு, செப். 19

பொலநறுவை - மஹியங்கனை வீதியின் லத்பந்துர சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒன்றரை வயதுக் குழந்தை யொன்று உயிரிழந்தது.

பொலநறுவையில் இருந்து மஹியங்கனை நோக்கி பயணித்த வான் சாரதி உறங்கியதால் வீதியை விட்டு விலகி எதிர்த் திசையில் வந்த முச்சக்கர வண்டியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த குழந்தை, அதன் சகோதரர், தாய் மற்றும் முச்சக்கரவண்டியை ஓட்டிச் சென்ற நபர் தெஹியத்தகண்டி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். சேர்க்கப்பட்ட சிறிதுநேரத்தில் குழந்தை உயிரிழந்தது.

விபத்து தொடர்பில் வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் வானில் பயணித்த ஒருவரும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# நாடு முழுவதும் 716 பேர் கைது!

கொழும்பு, செப். 19

நாடளாவிய ரீதியில் நேற்று காலை வரையான 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 716 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 712 ஆண்களும் 04 பெண்களும் அடங்குவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 4 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# வாகன ஒழுங்குபடுத்தல் ஆலையை திறந்துவைத்தார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, செப். 19

வாகன ஒழுங்குபடுத்தல் தொழிற்சாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் குளியாப்பிட்டியில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

வெஸ்டர்ன் ஓட்டோமொபைல் தனியார் நிறுவனத்தின் தொழிற்சாலையே திறந்து வைக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் இலங்கை முதலீட்டு நிறுவனத்தினால் வெஸ்டர்ன் ஓட்டோமொபைல் நிறுவனத்துடன் செய்த உடன்படிக்கைக்கு அமைவாக இந்த தொழிற்சாலை நிறுவப்பட்டிருந்தது. (அ)

# நீண்ட காலமாக மரக் கடத்தலில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர் கைது!

கொழும்பு, செப். 19

புத்தளம், வனாத்தவில்லு, தப்போவ வனப்பகுதியில் நீண்டகாலமாக மரக் கடத்தலில் ஈடுபட்டு வந்த சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கருவலகஸ்வெவ வனஜீவ ராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் இந்த வனப்பகுதியில் சுற்றித்திரியும் வன விலங்குகளையும் வேட்டையாடியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடம் இருந்து துப்பாக்கி, 02 ரவைகள், 09 வெற்று தோட்டாக்கள், இரும்பு ஆயுதங்கள், 100 கிலோமான் இறைச்சி மற்றும் மரப் பலகைகள் என்பன பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ரால்மடு - எலுவங்குளம் பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (அ)

# தேர்தல் மூலம் 100 கோடி ரூபா வருமானம் தனியார் பஸ் உரிமையாளர்கள் மகிழ்ச்சி

கொழும்பு, செப். 19

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நேற்று புதன்கிழமை இறுதிகட்ட தேர்தல் பிரசாரத்தில் ஜனாதிபதி வேட்பாளர்கள் ஈடுபட்டனர்.

பிரதான வேட்பாளர்களாக கருதப்படும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் கொழும்பை மையப்படுத்தி தமது பிரசாரக் கூட்டங்களை ஏற்பாடு செய்தனர்.

இந்தக் கூட்டங்களுக்கு நாடு முழுவதும் இருந்து ஆதரவாளர்களை அழைத்துவர குறித்த மூன்று வேட்பாளர்களும் தனியார் பஸ்களை முன்பதிவு செய்துள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன-

இவ்வருட ஜனாதிபதித் தேர்தலின் பிரசாரக் கூட்டங்களுக்காக 200 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை பஸ்களுக்காக செலவிடப்பட்டுள்ளது.

100 கோடி ரூபாய் வரை தனியார் பஸ்கள் இலாபம் அடைந்துள்ளன.

இறுதிக் கூட்டத்துக்கு தமது ஆதரவாளர்களை அழைத்துவர 1500 பஸ்கள் முன்பதிவு செய்யப்பட்டன. தேசிய மக்கள் சக்தியால் அதிகூடிய பஸ்கள் பெறப்பட்டன.

இதேவேளை, இலங்கை முழுவதும் தேர்தல் கடமைகளுக்காக கிட்டத்தட்ட 500 பஸ்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் 20ஆம் திகதி நாடு முழுவதும் 50 வீதமான பஸ்கள் இயக்கப்படும். தேர்தல் நடைபெறும் 21ஆம் திகதி 10 முதல் 15 வரை பஸ்கள் இயக்கப்படும்-என்றார். (அ)

# டொலரின் பெறுமதி அதிகரிப்பு!

கொழும்பு, செப். 19

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 297 ரூபாய் 72 சதம், விற்பனைப் பெறுமதி 307 ரூபாய் 1 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ஸ் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 390 ரூபாய் 55 சதம், விற்பனைப் பெறுமதி 405 ரூபா 73 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 329 ரூபாய் 51 சதம், விற்பனைப் பெறுமதி 343 ரூபாய் 19 சதமாகும். (அ)

# படுக்கை அறையிலிருந்து மீட்கப்பட்ட பத்து வாள்கள்!

கொழும்பு, செப். 19

தெய்யந்தர அதபத்துகந்த பிரதேசத்தில் வீடொன்றில் மறைத்து வைத்திருந்த 10 வாள்களுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் அதபத்துகந்த, டியெந்தர பிரதேசத்தை சேர்ந்த 62 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, வீடொன்றின் படுக்கையறையில் கட்டிலுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 வாள்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# லொறி விபத்தில் ஒருவர் காயம்!

கொழும்பு, செப். 18

கதிர்காமம் - செல்லகதிர்காமம் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

அம்பாந்தோட்டையிலிருந்து மஹியங்கனை நோக்கி மீன்களை ஏற்றிச் சென்ற சிறிய லொறி சாரதி உறங்கியதால் வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்து இடம்பெற்றது.

இதில், சாரதியின் உதவியாளர் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

# 3,570 கஞ்சா செடிகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, செப். 19

மொனராகலை, தணமல்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சூரியஆர பிரதேசத்தில் கஞ்சா செடிகளுடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

தணமல்வில, சூரியஆர பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 3,570 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக தணமல்வில பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
19.09.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், புரட்டாதி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எது புத்திசாலித்தனம் - எது முட்டாள்தனம்?

தேர்தல் பரப்புரைகள் நிறைவுறுகின்றன. இன்னும் மூன்று தினங்களில் நாட்டின் புதிய ஜனாதிபதி யார் என்பது தெரிந்துவிடும். தேர்தல் முடிவுகள் ஒன்றில் சாதாரணமான ஒன்றாக இருக்கலாம் அல்லது ஒரு வரலாற்று மாற்றமாக இருக்கலாம். எது நடப்பினும், தமிழ் மக்களின் எதிர்பார்ப்பில் எந்தவோர் அதிசயமும் நடந்துவிடப் போவதில்லை. எப்போதும் போல, தமிழரின் வாழ்வு வழமைபோல் உப்புச்சப்பு இல்லாத நிலைமை என்று சொல்லக்கூடிய நிலையிலேயே தொடரப்போகின்றது. இந்த இடத்தில் எழும் கேள்வி - தமிழ் மக்கள் யாரோ ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கும் வாக்களித்தால் என்ன அதிசயம் நிகழ்ந்தவிடப் போகின்றது - அதேபோல், தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதால் என்ன அதிசயம் நடந்துவிடப் போகின்றது?

தமிழ் மக்களின் வாக்குகளை பெறும் தென்னிலங்கை வேட்பாளர்களில் சிலர் வெற்றி பெற்றிருக்கின்றனர் - சிலர் தோல்வியடைந்திருக்கின்றனர். வெற்றி பெற்றவர்கள் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு மாறாக, அதனை கூர்மைப்படுத்தும் வேலைகளையே செய்திருக்கின்றனர். இது எதனை உணர்த்துகின்றது. நீங்கள் வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் அவர்கள் எதைச் செய்ய நினைக்கின்றார்களோ, அதனையே செய்வார்கள். அவ்வாறாயின் தமிழ் மக்கள் வழங்கும் வாக்கின் பெறுமதி என்ன? கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களின்போதும் இதனைத் தெளிவாக நோக்கலாம் - தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றவர்களில் மைத்திரிபால ஒருவரே அதிகாரத்துக்கு வந்தார் - ஆனால், அவரும் எதனையும் தமிழ் மக்களுக்காகச் செய்யவில்லை.

இந்த ஜனாதிபதித் தேர்தலை பொறுத்தவரையில் யார் வெற்றி பெறுவர் என்பதைக் கணிப்பது மிகவும் கடினமாக இருக்கின்றது. அநுரகுமார சிங்கள மக்கள் மத்தியில் அதிகம் விரும்பப்படுகிறாரென கணிப்புகள் கூறுகின்றன. கோட்டபாயவின் ஆதரவுத் தளம் முழுவதும் அநுரவுக்கு மாறியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. இந்த நிலையில் அநுரகுமார வெற்றிபெற்றால் தோல்வியடையப் போகும் ஒருவருக்கு அளிக்கப்படும் தமிழ் வாக்குகளின் பெறுமதி என்ன? கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, சஜித் பிரேமதாஸவுக்கே தமிழ் மக்கள் வாக்களித்திருந்தனர். ஆனால், அவர் வெற்றிபெறவில்லை.

அப்போதும் சஜித்துக்கு வாக்களிக்குமாறு தமிழ் அரசியல்வாதிகள் கோரியிருந்தனர். இப்போதும் தமிழ் அரசு கட்சியின் ஓர்அணி, சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்குமாறு கூறுகின்றது. சுமந்திரன் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றார். சஜித் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே இருப்பதாகவும் கணிப்புகள் உண்டு. ஏனெனில், சஜித் வெற்றிபெற வேண்டுமாயின் அவருக்கு தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் முழுமையான வாக்குகள் கிடைக்க வேண்டும் அதற்கான வாய்ப்பு தற்போதில்லை. ஏனெனில், தமிழ்த் தேசிய உணர்வுள்ள மக்களுக்கு முன்னால் தமிழ் பொது வேட்பாளர் ஒரு தெரிவாக இருக்கின்றார்.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் தமிழ் அரசியல்வாதிகளும் இருக்கின்றனர். அவர்களும் பிரசாரங்களில் ஈடுபடுகின்றனர். இந்த நிலையில் தமிழ் மக்களின் வாக்குகள் மூன்றாக பிரிகின்றது? இது தமிழ் மக்களின் ஜனநாயக பலத்தை காண்பிப்பதற்கு உகந்த ஒன்றல்ல. ஆனால், இதனை இலகுவாக சரி செய்ய முடியும் - எப்படி?

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதன் ஊடாக தமிழ் மக்களின் ஒற்றுமையை காண்பிக்க முடியும். இதன்மூலம் தென்னிலங்கை அதிகார போட்டியிலிருந்து நாங்கள் விலகி நிற்க முடியும். அதிகாரத்துக்கு வருபவருடன் தமிழ் மக்களின் தலைவர்கள் பேச முடியும். இது ஒன்றுதான் இன்றைய சூழலில் தமிழ் மக்கள் மேற்கொள்ளக்கூடிய புத்திசாலித்தனமான முடிவாகும். ஏனைய முடிவுகள் எவையுமே புத்திசாதுர்யமான முடிவுகளாக இருக்க முடியாது. அவைகளை முட்டாள்த்தனமான தீர்மானங்கள் என்று கூறுவதைத் தவிர, வேறு சொற்களை கண்டுபிடிப்பது கடினமானது.

# உத்திகவின் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு; சந்தேகநபர் சொத்துகளை பயன்படுத்த தடை

கொழும்பு, செப். 19

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் கார்மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் உதவி பொலிஸ் அத்தியட்சகரின் சில சொத்துக்களைப் பயன்படுத்த கொழும்பு மேல் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

அதற்கமைய, குறித்த உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு சொந்தமான 3 கார்கள் மற்றும் 2 காணிகளை நேற்று முதல் 3 மாதங்களுக்குப் பயன்படுத்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கையூட்டலுக்கு எதிரான விசாரணை ஆணைக்குழுவின் சட்டவிரோத பணம் மற்றும் சொத்துகள் தொடர்பான விசாரணைப் பிரிவினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான உதவி பொலிஸ் அத்தியட்சகர் போதைப்பொருள் வர்த்தகம் மூலமாக சட்டவிரோதமாக பணம் ஈட்டியமை தொடர்பிலான விசாரணைகளுக்கமைய இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# வெடிபொருட்களுடன் நான்கு பேர் கைது!

கொழும்பு, செப். 19

மாத்தளை, நாவுல பிரதேசத்தில் வெடிபொருட்களுடன் நான்கு சந்தேக நபர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நாவுல பொலிஸார் தெரிவித்தனர்.

நாவுல பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த ஓட்டோவை சோதனையிட்ட போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவுல, புஸல்லாவை, உடத்தலவின்ன மற்றும் வத்தேகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 38, 49 மற்றும் 50 வயதுடைய நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 05 டெட்டனேட்டர் குச்சிகள் மற்றும் 03 வோட்டர் ஜெல் குச்சிகள் ஆகிய வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# பலநாள் மீன்பிடிப் படகில் காயமடைந்த மீனவர் மீட்பு

கொழும்பு, செப். 19

இலங்கைக்கு தெற்கே உள்ள ஆழ்கடல் பகுதியில் உள்ளூர் பலநாள் மீன்பிடி இழுவைப் படகிலிருந்த காயமடைந்த மீனவர் ஒருவரை இலங்கை கடற்படையினர் கரைக்குக் கொண்டு வர உதவி புரிந்தனர்.

கொழும்பு கடல்சார் மீட்பு மையத்தின் ஒருங்கிணைப்பின் மூலம் கடல் பகுதியில் வணிகக்கப்பல் மூலம் நேற்று மீனவர் மீட்கப்பட்டுள்ளார்.

பியூலா - 02 என்ற உள்ளூர் பலநாள் மீன்பிடி இழுவை படகு 07 மீனவர்களுடன் வென்னப்புவ மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த 17ஆம் திகதி புறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில் மீன்பிடி படகிலிருந்த பணியாளர் ஒருவருக்கு மீன்கடித்து காயம் ஏற்பட்டதாகவும் அவசர சிகிச்சைக்காக கரைக்கு மாற்றுவதற்கு கடற்படையின் உதவியைக் கோரியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய, கொழும்பு கடற்படை தலைமையகத்தில் நிறுவப்பட்டுள்ள எம்.ரி.கியெல் எக்ஸ்பிரஸ் எனும் கப்பல் இழுவைப் படகு இருந்த இடத்துக்கு அனுப்பப்பட்டு மீனவரை மீட்டு முதலுதவியளித்ததன் பின்னர் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாடசாலை சீருடை நவம்பர் வரும்

கொழும்பு, செப். 19

சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட பாடசாலைச் சீருடைகளின் முதலாவது தொகுதியை எதிர்வரும் நவம்பர் மாதம் 13ஆம் திகதி இலங்கை பெற்றுக்கொள்ளவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி 03 கட்டங்களின் கீழ் பெறப்பட்ட பாடசாலை சீருடைகளின் கடைசி கையிருப்பு டிசெம்பர் 20 ஆம் திகதி இலங்கையில் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

மேலும், 2025ஆம் ஆண்டு புதிய பாடசாலை தவணை ஆரம்பிக்கும் ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் சீருடைகள் விநியோகிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# பாதாள உலகக்குழு உறுப்பினர் கைது!

கொழும்பு, செப். 19

டுபாயில் உள்ள பாதாள உலகக்குழுத் தலைவரின் முக்கிய உதவியாளர் ஒருவர் போதைப்பொருளுடன் கட்டுநாயக்க பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

ஆண்டியம்பல பிரதேசத்தைச் சேர்ந்த, 31 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 19 வியாழக்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 03
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : துவிதியை




**மேடம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**இடபம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும் நாள்.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**கடகம்**
இதுவரை இருந்த அலைச் சல் நீங்கி குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாற்றம் ஏற்படும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கவனம் தேவை.

**கன்னி**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதரர் வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**துலாம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். சிந்தனை திறன் வெளிப்படும் நாள்.

**தனுசு**
பழைய பிரச்சினைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**மகரம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
கடந்த 2 நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிக்கும். நல்லது நடக்கும் நாள்.

**மீனம்**
ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். மன இறுக்கங்கள் உருவாகும். மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

# கூட்டணி பிளவுபடாததால் மதவாத சக்திகள் விரக்தி!

## தமிழிசைக்கு திருமாவளவன் பதிலடி





சென்னை, செப். 19

தமிழகத்தில் ஆளும் கூட்டணி பிளவுபடும் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறாததால் விரக்தியில் பேசுகின்றனர் என்று முன்னாள் ஆளுநர் தமிழிசைக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் பதிலளித்துள்ளார்.

நாம் முரண்பட்டு பிளவுபடுவோம் என்று மதவாத சக்திகள் கனவுகண்டன. அது நடைபெறவில்லை. அது நடைபெறப் போவதும் இல்லை என்றும் அவர் கூறினார்.

"மது ஒழிப்பு மாநாடு விவகாரத்தில் சிறுத்தையாக தொடங்கிய திருமாவளவன் முதல்வர் ஸ்டாலினை சந்தித்ததும் சிறுத்துப் போய்விட்டார்" என்பன உள்ளிட்ட விமர்சனங்களை தமிழிசை முன்வைத்திருந்தார். இந்த நிலையில், ரெட்டமலை சீனிவாசன் நினைவுநாளை ஒட்டி, அவரது நினைவிடத்தில் திருமாவளவன் நேற்றுப் புதன்கிழமை அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு, "பெரியார் திடலில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் மரியாதை செலுத்தியதைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சியுற்றேன். அதை வரவேற்றுப் பாராட்டி, சமூக வலைத்தளப் பக்கங்களிலும் பதிவு செய்தேன். சமூக நீதி பார்வையோடு அவர் அரசியல் களத்தில் அடியெடுத்து வைக்கிறார் என்பது மகிழ்ச்சியளிப்பதுடன் மிகுந்த நம்பிக்கையும் அளிக்கிறது. பெரியார் அரசியல் என்பது தி. மு. க., அ. தி. மு. க. அரசியல் கட்சிகளுக்கானது மட்டுமல்ல, சமூக நீதி மீது நம்பிக்கை கொண்ட அனைவருக்குமானது. சமத்துவத்தை நாடும் அனைவருக்குமானது. அந்த புரிதல் நடிகர் விஜய்க்கு இருப்பதை அறிந்து பெருமைப்படுகிறேன்"- என்றார்.

(எ)

# நூற்றாண்டு விழாவின்போதும் தி. மு. க. ஆட்சியில் இருக்கும்

## முதல்வர் ஸ்டாலின் நம்பிக்கை



சென்னை, செப். 19

வெள்ளி விழா, பொன் விழா, பவள விழாவின்போது ஆட்சியில் இருப்பதுபோல, நூற்றாண்டு விழாவின் போதும் தி. மு. க. ஆட்சியில் இருக்கும் என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சென்னை நந்தனத்தில் நடந்த தி. மு. கவின் பவள விழா மற்றும் முப்பெரும் விழாவில் ஸ்டாலின் இவ்வாறு கூறினார். "தொண்டர்களின் வியர்வை, மூச்சுக் காற்றால்தான் தி. மு. க. கம்பீரமாக, தலை நிமிர்ந்து நிற்கிறது. நீங்கள் இல்லாமல் தி. மு. க. இல்லை நானும் இல்லை.

கடந்த 1967ஆம் ஆண்டு எனது 13 வயதில் கோபாலபுரத்தில் தி. மு. க. இளைஞர் அணியை தொடங்கி, 53 ஆண்டு இயக்கத்துக்கும், தமிழகத்துக்கும் உழைத்த உழைப்புக்கான அங்கீகாரம்தான் தற்போது பவளவிழா காணும் தி. மு. கவுக்கு நான் தலைவராக இருப்பது.

தி. மு. க. தலைவர் என்ற தகுதியை வழங்கியது நீங்கள். தமிழகத்தின் முதல்வர் என்ற தகுதியை வழங்கியது தமிழக மக்கள். கழகமும், தமிழகமும் என் இரு கண்களாக கொண்டு செயல்பட்டு வரும் இந்த நேரத்தில், பவள விழா கொண்டாடுவதை வாழ்நாள் பெருமையாக கருதுகிறேன்"- என்றார்.

இதேவேளை, முதல்வர் மு. க. ஸ்டாலினுடன் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி அமர்ந்திருப்பது போன்று ஏ ஐ தொழில்நுட்ப உதவியுடன் திரையில் தோன்றிய காட்சி தொண்டர்களை உற்சாகமடைய வைத்தது.

(எ)

# புதுச்சேரியில் வீதி மறியல் 100 பேர் கைது



புதுச்சேரி, செப். 19

புதுச்சேரியில் மின் கட்டண உயர்வை இரத்து செய்யக்கோரி இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் நேற்றுப் புதன்கிழமை வீதி மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். அப்போது அரசுப் பேருந்து மீது கல் வீசப்பட்டதில் பேருந்தின் கண்ணாடி சேதமடைந்தது. இதனால் அங்கு சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஜனாதிபதி இன நல்லிணக்கத்துக்கு முன்னுரிமை கொடுப்பது அவசியமானது!

### தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்து

கொழும்பு, செப். 19

**ஜனாதிபதி தேர்தலில் தெரிவாகும் புதிய ஜனாதிபதி இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்துக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டியது அவசியம் என்று தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியிருக்கிறது.**

இது தொடர்பாக சமாதானப் பேரவை வெளியிட்ட அறிக்கையில்-

ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்கள் முடிவுக்கு வரும் நிலையில், தேர்தல் போட்டியில் இருந்து கவனம் நாடு முகங்கொடுங்கும் அவசர சவால்களை நோக்கித் திரும்பவேண்டும். தேர்தல் முடிவு நிச்சயமற்றதாக இருக்கின்ற அதேவேளை, பொருளாதார உறுதிப்பாடின்மையுடனும் ஆழமாக வேரூன்றிய ஊழல் மற்றும் தண்டனையின்மைக் கலாசாரத்துடனும் மல்லுக்கட்டிக்கொண்டிருக்கும் ஒரு நாட்டையே புதிய ஜனாதிபதி பொறுப்பேற்கப் போகிறார்.

அதிகாரப் பரவலாக்கலை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறான அரசியல் தீர்வொன்றின் ஊடாக நீண்டகால இனநெருக்கடியைத் தீர்த்து வைக்க வேண்டிய தேவையும் அமையவிருக்கும் புதிய அரசாங்கம் முன்னிலையில் வைத்துக் கவனிக்க வேண்டிய ஒரு சவாலாகும். நாட்டுக்கு நிலையான அமைதியையும் ஐக்கியத்தையும் கொண்டுவருவதற்கு இந்த பிரச்சினைக்கு புதிய ஜனாதிபதி முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

சுதந்திரத்துக்கு பின்னர் பல்லின சமுதாயம் ஒன்றை நேர்மையுடனும் சகல தரப்பினரையும் அரவணைக்கும் அணுகுமுறையுடனும் ஆட்சி செய்யத் தவறியமையே பல தசாப்தகால போருக்கும் பயங்கரவாதத்துக்கும் வழி வகுத்தது. இந்த பிளவுகள் நாட்டின் பொருளாதாரத்தையும் மனித வளங்களையும் விரயம் செய்ததுடன் முன்னேற்றத்துக்கு தொடர்ந்தும் தடங்கலாக இருக்கும் காயங்களையும் விட்டுச் சென்றிருக்கிறது.

இந்த நாடு எம்மெல்லோருக்கும் சொந்தம் என்று உரிமை கொண்டாடக்கூடியதாக ஒரு தேசிய உரித்து உணர்வை வளர்ப்பதற்கும் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும் சகல சமூகங்களினதும் அபிலாசைகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு மெய்யான அரசியல் தீர்வு இன்றியமையாததாகும். எந்தவொரு அரசியல் தீர்விலும் மலையகத் தமிழ்ச் சமூகத்துக்கு உரிய இடம் அளிக்கப்படுவதை புதிய ஜனாதிபதி உறுதிசெய்ய வேண்டும். சுதந்திரத்துக்கு பின்னரான ஏழு தசாப்த காலத்தில் உரியமுறையில் கவனிக்கப்படாத ஒரு சமூகமாக மலையகத் தமிழர்கள் அவலங்களை அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

மூன்று முன்னணி வேட்பாளர்களும் வெவ்வேறு வழிகளில் நாட்டுக்கு தலைமை தாங்கி வழிநடத்துவதில் தங்களுக்கு இருக்கும் ஆற்றலை வெளிக்காட்டியிருக்கிறார்கள். ஆனால், நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு அவர்கள் இனநெருக்கடியை பின்னரங்கத்துக்கு தள்ளிவிடாமல் அதை தீர்த்து வைப்பதற்கு தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

தேர்தலில் எவர் வெற்றி பெற்று புதிய ஜனாதிபதியாக வந்தாலும், அவர் மாகாண சபைகளுக்கு அதிகாரமளிக்கும் ஒரு அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டை முன்னெடுப்பதன் மூலமும் சிறுபான்மைச் சமூகங்களுக்கு ஒப்புரவான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்வதன் மூலமும் தலைமைத்துவத்தை வெளிக்காட்ட வேண்டும்-என்றுள்ளது. (அ)

# 4,737 தேர்தல் முறைப்பாடுகள்!

ශ්‍රී ලංකා මැතිවරණ කොමිෂන් සභාව
இலங்கை தேர்தல் ஆணைக்குழு
Election Commission of Sri Lanka

கொழும்பு, செப். 19

ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய சட்டமீறல் மற்றும் வன்முறை உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை 4,737 ஆக அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து நேற்று முன் தினம் மாலை வரையான காலப்பகுதியில் இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அதற்கமைய, நேற்று முன் தினம் 156 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் 4,209 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# பஸ்ஸில் ஏற முயன்ற பெண் சில்லுக்குள் சிக்கி உயிரிழப்பு

கொழும்பு, செப். 19

நாவலமுல்ல - மீகொடை வீதியில் சிரிமெதுரவத்த பிரதேசத்தில் பஸ்ஸின் சில்லுக்குள் சிக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று புதன் கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

மீகொடதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் மற்றுமொரு நபருடன் சேர்ந்து தனியார் பஸ் ஒன்றில் ஏறுவதற்கு முயன்றபோது பஸ்ஸின் மிதிபலகையிலிருந்து தவறி வீழ்ந்து பஸ்ஸின் சில்லுக்குள் சிக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, விபத்தை ஏற்படுத்திய பஸ் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொடை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# தங்கச்சிலையை திருட முயன்றவர் சிக்கினார்

கொழும்பு, செப். 19

புத்தளம் - கருவலகஸ்வெவ புளியங்குளம் வெஹெரகல ரஜமஹா விகாரையின் தங்கச் சிலையை திருடுவதற்காக வந்த இரண்டு கொள்ளையர்களை கிராம மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக சாலியாவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் அதிகாலை வாகனம் ஒன்றில் குறித்த விகாரைக்கு வந்த கொள்ளையர்கள் சிலர், அங்கு பாதுகாப்புக்கு இருந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை தாக்கி அவர்களின் துப்பாக்கிகளையும் பறித்தெடுத்து, அங்கிருந்த தங்கச் சிலையை திருட முயற்சித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொள்ளையர்கள் தங்கச் சிலையை திருடுவதற்கு முற்பட்டபோது, அங்கிருந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சத்தமாக கூச்சலிட்டனர்.

அந்த அலறல் சத்தத்தைக் கேட்டு விகாரையில் தங்கியிருந்த தேரர்களும் ஏனையவர்களுடன் கிராம மக்களும் அங்கு வந்துள்ளனர்.

இவ்வாறு விகாரையில் மக்கள் ஒன்றுகூடுவதை அவதானித்த கொள்ளையர்கள், தாம் வந்த வாகனத்தில் தப்பிச் சென்றதாகவும், அதில் மூவர் விகாரை வளவு வழியாக தப்பிச் செல்ல முயற்சி செய்தனர். அந்த மூவரில் ஒருவரை அங்கிருந்த பொது மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

விகாரை வளவு வழியாக தப்பிச் சென்ற ஏனைய இருவரும் பொதுமக்களின் பிடியில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

பின்னர் அவர்கள் வீடொன்றில் பதுங்கியிருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (அ)

# மசாஜ் நிலைய பெண்களிடமிருந்து இலஞ்சம் பெற்ற கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, செப். 18

சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு மசாஜ் நிலைய பணிப் பெண்களிடமிருந்து இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

எலயாபத்துவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 27 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த 14 ஆம் திகதி இரவு 11.30 மணியளவில் பெண்ணொருவருடன் இணைந்து மோட்டார் சைக்கிளில் மசாஜ் நிலையம் ஒன்றிற்குச் சென்றுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் மசாஜ் நிலையத்திலிருந்த பணிப்பெண்களிடம் தான் சுற்றிவளைப்பு நடவடிக்கைக்காக வந்ததாகவும் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு 3 ஆயிரம் ரூபா பணம் வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

பின்னர், இந்த பணிப்பெண்கள் சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு 2 ஆயிரம் ரூபா பணத்தை மாத்திரம் கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் மசாஜ் நிலையத்திலிருந்து வெளியே சென்று மறுநாள் இரவு மற்றுமொரு நபருடன் இணைந்து குறித்த மசாஜ் நிலையத்துக்கு மீண்டும் சென்றுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் தன்னுடன் வந்த நபருக்கு இலவசமாகச் சேவையை வழங்க வேண்டும் என மசாஜ் நிலைய பணிப்பெண்களிடம் கூறியுள்ளார்.

பின்னர், சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும் மசாஜ் நிலையப் பணிப்பெண்ணின் கணவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டார். (அ)

# சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் கொலை!

கொழும்பு, செப். 19

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் காலி - ஹினிதும தொகுதியின் பிரதான அமைப்பாளராக இருந்த சம்பத் கமகே, அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஹோமாகம - பனாகொட சமகி மாவத்தையில் உள்ள அவரது வீட்டில் வைத்து இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக மீகொட பொலிஸார்தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டியில் வந்த நபரொருவர் தடியால் தாக்கியதாகவும், பலத்த காயமடைந்த சம்பத் கமகே ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலை செய்த சந்தேக நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

உயிரிழந்தவர் சுதந்திரக் கட்சியின் காலி - ஹினிதும தொகுதியின் பிரதான அமைப்பாளராக இருந்தவர் என்றும், இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து தனது ஆதரவை தெரிவித்ததாகவும் நுகேகொடை பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# அருகில் உள்ள அஞ்சல் நிலையங்களில் வாக்காளர் அட்டைகளைப் பெறலாம்!

கொழும்பு, செப். 19

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள், நேற்று முதல் அருகில் உள்ள அஞ்சல் நிலையங்களுக்குச் சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என அஞ்சல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைச் சமர்ப்பித்து காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையான காலப்பகுதியில் வாக்காளர் அட்டையைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 21ஆம் திகதி வரை அஞ்சல் நிலையங்களில் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தகுதி பெற்ற அனைவருக்கும், ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கான வாய்ப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இல்லாத வாக்காளர்கள், வாக்களிப்பு நிலையத்தில் செல்லுபடியாகும் அடையாள அட்டையைக் காண்பித்தும் வாக்களிக்க முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# எம் சரியான வழிகாட்டலுக்கு மக்கள் வலு சேர்க்கவேண்டும்

## திருமலையில் அமைச்சர் டக்ளஸ்!

திருமலை, செப். 19

**கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு நான் சரியான வழிநடத்தலையும் வழிமுறையையுமே வழங்கி வருகின்றேன். எமது வழிமுறையே சாத்தியமானது என்பதும் இன்று நிரூபணமாகியுள்ளது என சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அந்த அனுபவத்தினூடாகத்தான் இம்முறை ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியும் நாட்டுக்கு அவசியமாக இருக்கின்றது. அவரை வெற்றி பெறச் செய்யுங்கள் என கோருகின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்கு வலுச்சேர்க்கும் வகையில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டார்.

அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்களுடனான பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டு இவ்வாறு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் -

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் யாரை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்பதில் வடக்கு கிழக்கு மக்கள் தெளிவாக உள்ளனர். குறிப்பாக அனுபவமும் ஆற்றலும் உள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் முழுமையாக வாக்களிப்பார்கள் என நாம் நம்புகிறோம்.

இதேநேரம் ஈ.பி.டி.பியினராகிய எமது வழிமுறையே வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கு சாத்தியமான தீர்வை தரும். எம்முடன் இணைந்து பயணியுங்கள் என நான் மூன்று தசாப்தங்களாக திருமலை மாவட்ட மக்களிடம் அழைப்பு விடுத்து வந்திருந்த போதும் அவர்கள் தவறானவர்களின் வழிநடத்தலிலிருந்து மீளமுடியாதிருந்தமையால் பல்வேறு அசௌகரியங்களை இன்றுவரை எதிர்கொண்டுவர நேர்ந்துள்ளது.

இதேநேரம் குறித்த தவறான வழிநடத்தலை மக்கள் ஓரங்கட்டி அதிலிருந்து வெளிவராவிட்டால் இம்மாவட்டத்தில் தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவமும் இன்வரும் காலத்தில் இல்லாதுபோகும் சூழ்நிலை உருவாகும்.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இன்றுவரை இருந்துவருவதற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியே முக்கிய காரணமாக இருந்திருக்கின்றது.

அதற்கு திருமலை மாவட்டத்தில் நாம் அன்று எமக்கிருந்த அரசியல் பிரதிநிதித்துவத்தினூடான செய்த குடியேற்றத் திட்டங்களும் சேவைகளுமே காரணம்-என்றார். (அ)

# போதைப்பொருள், பாதாள குழுக்கள் எம் ஆட்சியில் முற்றாக ஒழிக்கப்படும்

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச

கொழும்பு, செப். 19

போதைப்பொருளையும் பாதாள உலகக் குழுவையும் ஆறு மாதங்களில் முற்றாக ஒழிப்பதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போதைப்பொருள் வர்த்தகர்களுடனும் பாதாள உலகக் குழுவினருடனும் எமக்கு தொடர்பு கிடையாது. அவற்றை முற்றாக ஒழிப்பதற்கு எமது ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறானரோடு தொடர்புகளைப் பேணியோர் தண்டிக்கப்படுவர்.

நாட்டில் கடந்த காலங்களில் அரச சொத்துகள் விற்பனை செய்யப்பட்டன. அவற்றை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். அதே போன்று எதிர்காலத்தில் அரச வளங்கள் விற்பனைசெய்யப்படாது என்ற உறுதிமொழியை நான் இங்கே வழங்குகிறேன்.





நாட்டில் உள்ள இளையோர் 10 இலட்சம் பேரை தொழில்முனைவோராக மாற்றும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். ஒவ்வொரு பிரேதச செயலகப் பிரிவுகளிலும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஆரம்பிக்கப்படும். அதனூடாக புதிய தொழில்நுட்பங்களை வழங்கி சர்வதேச தகைமையை நோக்கி நகர்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் 20 இலட்சம் மேலதிக வாக்குகளால் நாம் வெற்றிபெறுவோம் என்பது உறுதியாகிவிட்டது. ஆதலால் எமக்கே வாக்களிக்குமாறு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன்-என்றார். (அ)



# சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக ரிஷாத் வவுனியாவில் பிரசாரம்

வவுனியா, செப். 19

வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான ரிஷாத் பதியுதீன் நேற்று ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதாரித்து வவுனியாவில் பிரசார நடவடிக்கையினை முன்னெடுத்தார்.

இதன்போது கட்சியின் முன்னாள் உளளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்காமல் என் தலையை பரிசோதிக்க சொல்கிறார் அநுர

## கிழக்கின் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா

அம்பாறை, செப். 19

அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்தால் நாடு முழுவதும் ஓரினச்சேர்க்கை நிலையங்களும் விபசார விடுதிகளும் சட்டப்படி திறக்கப்படும் என்று நான் கூறிய கருத்துக்கு அவர் பதிலளிப்பதை விடுத்து எனது தலையை பரிசோதிக்க வேண்டுமெனக் கூறியுள்ளார் என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.ம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு, மாளிகைக்காடு பிரதேசத்தில் சஜித் பிரேமதாசவை ஆதரித்து முஸ்லிம் காங்கிரஸ் ஒழுங்கு செய்திருந்த பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்தால் நாடு முழுவதும் ஓரினச்சேர்க்கை நிலையங்களும் விபசார விடுதிகளும் சாராயத் தவறணைகளும் சட்டப்படி திறக்கப்படும். அவற்றை எதிர்த்து பள்ளிவாசல்களில் கூட உலமாக்கள் பேச முடியாது.

அநுரகுமார திசாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வாசித்து விட்டே நான் மீண்டும் மீண்டும் இதனைக் கூறி வருகின்றேன்.

அவ்வாறுதான் முஸ்லிம்கள் தமது பெருநாட்களைக்கூட அந்தந்த தினங்களில் தனித்துவமாகக் கொண்டாட முடியாது. அனைத்து மதத்தினருக்குமான பெருநாட்களை ஒரே நாளில் ஒரே இடத்தில் ஒன்றுகூடி குடித்து கும்மாளமடித்தே கொண்டாட முடியும்.

இவையெல்லாம் அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்தான் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை எல்லா இடங்களிலும் கூறி வருகின்றேன்-என்றார். (அ)

# “நிற்கும் பக்கத்தை வெல்ல வைப்பதே உண்மை வீரம்”

கொழும்பு, செப். 19

ஜெயிக்கிற பக்கத்தில் நிற்பது வீரம் கிடையாது. நிற்கும் பக்கத்தை ஜெயிக்க வைப்பதே உண்மையான வீரம். செப்டம்பர் 21 ஆம் திகதி அதனை நாம் செய்துகாட்டுவோம் என்றும் சவாலை ஏற்காது தப்பியோடிய தலைவர்கள் பக்கம் அல்ல, சவாலை ஏற்று மக்களை பாதுகாத்த தலைவர் பக்கமே நாம் நிற்கின்றோம்.என இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், சுயேச்சை வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நேற்று இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்திலே அவர் இதனை தெரிவித்தார்

இதேவேளை தோட்டங்களை கிராமங்களாக்கும் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என்றும் அது தொடர்பில் அரசியல் நோக்கில் எதிரணிகளால் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களை மக்கள் நம்பக்கூடாது என்றும் ஜீவன் தொண்டமான் கூறினார்.



மேலும் காணி உரிமைதான் பிரதான பிரச்னை. அதனை வென்றெடுத்துவிட்டால் அனைவரும் வீடுகளை அமைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் ஒரே வருடத்தில் வீட்டுப் பிரச்னையை தீர்க்க முடியாது. ஆனால் காணி உரிமை கிடைத்துவிட்டால் இச்சமயம் மாற்றம் வரும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# அதிகாரப்பகிர்வு என்ற விடயத்தில் நாட்டை சீரழிப்பதற்கு சிலர் சூழ்ச்சி!

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த

கொழும்பு, செப். 19

அதிகாரப்பகிர்வு என்ற விடயத்தினுள் நாட்டை சீரழிக்கும் சூழ்ச்சி காணப்படுவதாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாரமய கூட்டத்தின் போதே அவர் நேற்று இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ராஜபக்ஷர்களுக்கு எப்போதும் ஆரம்பம் மறப்பதில்லை. நாட்டை பிளவுபடுத்தப்படப் போவதில்லை என்ற விடயத்தை முதுகெலும்புடன் நேரடியாக நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார். ஆனால் ஏனைய தரப்பினர் வடக்கிற்கு ஒரு கதையையும் தெற்கிற்கு ஒரு கதையையும் குறிப்பிடுகின்றனர்.

அனைவரும் அரசியலமைப்பு திருத்தம் குறித்து பேசுகின்றனர். ஆனால் அதிகாரப்பகிர்வை மக்கள் கோரவில்லை. ஏனைய வேட்பாளர்கள் இந்த விடயத்தை உள்ளடக்கியுள்ளனர். நாட்டை சீரழிக்கும் சூழ்ச்சியே அதனுள் காணப்படுகின்றது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கான சிறந்த தலைவரை உருவாக்க வாக்கு உரிமையை பயன்படுத்த வேண்டும்

## மன்னார் பிரஜைகள் குழு கோரிக்கை

மன்னார், செப். 19

**நாட்டுக்கான சிறந்த தலைவரை உருவாக்க, மக்கள் வாக்கு உரிமையை பயன்படுத்த வேண்டும் எனவும், மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும் எனவும் மன்னார் பிரஜைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.**

நேற்று, ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில், இவ்வாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

தூய்மையான, அமைதியான அரசியல், நாட்டில் முன்னெடுக்கப்பட்ட வேண்டும்.

எம் மக்கள் அமைதியுடனும், சம உரிமைகளுடன் வாழ வேண்டும்.

அடிப்படை தேவைகள் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும்.

நாட்டை அபிவிருத்தி பாதை யில் கொண்டு செல்லும், அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும், சிறந்த தலைவரை உருவாக்க, மக்கள் சிந்தித்து, சிறந்த தெளிவுடன் வாக்களிக்கும் உரிமையை செயற்படுத்த வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழு வலியுறுத்தியுள்ளது.

# நாட்டை மீட்டவரை தெரிவு செய்யுங்கள்

## விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 19

நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்ட தலைவரை, நாட்டு மக்கள் தெரிவு செய்ய வேண்டும் எனவும், ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்க வெற்றி பெறுவார் எனவும், ஐக்கிய தேசிய கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



நேற்று, யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பை நடத்திய வேளை, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# ரணில்- அநுர டீலை மக்கள் நன்கு அறிவர்!

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு, செப். 19

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் வெற்றியுடன் மக்களுக்கான புதிய அபிவிருத்தி யுகம் ஆரம்பமாகும் எனவும், ரணில் விக்கிரமசிங்க அநுரகுமார திசாநாயக்கவின் டீல் அரசியலை, நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் எனவும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற பேரணியில் உரையாற்றிய போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டு மக்கள் தங்கள் எதிர்காலம் தொடர்பாக பல எதிர்ப்பார்ப்புக்களுடன் காத்திருக்கின்றனர்.

எமது ஆட்சியில் நாம் மக்களின் எதிர்ப்பார்ப்புக்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றும் இலவச கல்வி, இலவச சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்துவோம்.

அரச துறையினருக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்போம் தனியார் துறையினரின் குறைந்தபட்ச சம்பளத்தினை 25 ஆயிரம் ரூபாவாக நடைமுறைப் படுத்துவோம். அதனை நாம் எமது கொள்கை திட்டத்திலும் இணைத்துள்ளோம்.

ரணசிங்க பிரேமாச ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட



கைத்தொழில் அபிவிருத்தி யுகம் மீண்டும் ஏற்படுத்தப்படும்.

கம்முதாவ இலவச வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்படும். நாட்டின் பொருளாதார கொள்ளையர்கள் சட்டத்தின் முன்னிறுத்தப்படுவார்கள். மக்களிடம் கொள்ளையடித்த பணத்தினையும் மீட்டுக்கொடுப்போம்.

இன்று பலர் அரச சொத்துக்களையும் மக்களின் பணங்களையும் கொள்ளையடித்த பொருளாதார கொள்ளையர்கள் தப்பித்து செல்வதற்கு இனியும் இடமளிக்க மாட்டோம்.

ரணில் விக்ரமசிங்க அநுரகுமார திசாநாயக்க டீல் அரசியலை இன்று முழு நாட்டு மக்களும் அறிவார்கள். 220 லட்சம் மக்களை இருவரும் ஏமாற்றி வருகின்றனர்.

மக்கள் போலிப் பிரசாரங்களுக்கு இனியும் ஏமாறக்கூடாது. 21 ஆம் திகதி ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் வெற்றியுடன் மக்களுக்கான புதிய அபிவிருத்தி யுகம் ஆரம்பமாகும்- என்றார். (அ)

# குறைபாடுகளை நிவர்த்தி செய்து பயணிக்க நாம் இப்போதும் தயார்!

## ஜனாதிபதி வேட்பாளர் நாமல்

கொழும்பு, செப். 19

குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு பயணிக்கத் தாம் தயார் என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாரமய கூட்டத்தின் போதே அவர் நேற்று இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரப்பிரசாதங்களுக்காக எம்மால் கொள்கைகளை மாற்றியமைக்க முடியாது. எம்மை திருடர்கள் என்கின்றனர். நாம் அவ்வாறு திருடவில்லை. சட்டவிரோதமாக நாம் உழைத்த பணம் எந்த நாட்டிலும் இல்லை.

அதனை உறுதிபடத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். உலகின் எந்த நீதிமன்றத்திற்கேனும் சென்று முடிந்தால் எம்மை திருடர்கள் என நிருபிக்குமாறு எம்மை திருடர்கள் என கூறுபவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். உலகின் எந்த நீதிமன்றுக்கும் சென்று நாம் நிரபராதிகள் என்பதை நிரூபிக்க நாம் தயாராகவே உள்ளோம்.

குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு பயணிக்க நாம்தயாராகவுள்ளோம் நாட்டை பிளவுபடுத்த நாம் விரும்பவில்லை. நாட்டு மக்களின் எதிர்காலத்தை பாதுகாப்பதே எம்முடைய நோக்கமாகும். கட்சி தாவும் தரப்பினர் இருக்கலாம்



ஆனால் மக்கள் கட்சி மாறுபவர்கள் அல்லர். நாம் நிச்சயம் நாட்டை ஆசியாவில் அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவோம் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்- என்றார். (அ)

# சஜித் வெற்றி பெற வேண்டி கிளிநொச்சியில் வழிபாடு

கிளிநொச்சி, செப். 19

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச வெற்றி பெற வேண்டி கிளிநொச்சியில் நேற்று வழிபாடு நடைபெற்றது.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச வெற்றி பெற வேண்டி கிளிநொச்சி செல்வாநகர் அம்பாள் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவின் சிவில் பாதுகாப்பு திணைக்கள முன்னாள் கட்டளை அதிகாரி ரட்ணப்பிரிய பந்து தலைமையில் குறித்த வழிபாடு நடைபெற்றது.

நிகழ்வில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர், கட்சியின் மாவட்ட முகாமையாளர் உட்பட கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (அ)

# "அநுரவின் வெற்றி உறுதி"

கொழும்பு, செப். 19

ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி உறுதியாகியுள்ளதாக, தேசிய மக்கள் சக்தியின் மலையக மத்திய குழு உறுப்பினர் பி.பி. சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி உறுதியாகியுள்ளதாகவும், ஏனைய வேட்பாளர் பொய்களை கூறினாலும், அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றியைத் தடுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று, நுவரெலியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# "ரணில் விக்கிரசிங்கவின் வெற்றி உறுதியாகியுள்ளது"

கொழும்பு, செப். 19

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரசிங்கவின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கையை வைத்து மக்கள் ஆதரவை தீர்மானிக்க முடியாது. கூட்டங்களில் கலந்துகொள்ளும் அனைவரும் அந்தக் கட்சிக்கு ஆதரவளிக்கமாட்டார்கள்.

நாம் மேற்கொண்ட கருத்துக் கணிப்பின் அறிக்கை இன்று காலை கிடைக்கப்பெற்றது. அதன் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அனைத்து மாவட்டங்களிலும் முன்னிலை வகிக்கிறார்.

ஒரு நாட்டை கொண்டு நடத்துவதற்கு அனுபவம் மிக்க தலைவர் தேவை. அவ்வாறில்லாத பட்சத்தில் என்ன நடக்கும் என்பதை நாம் நேரடியாக பார்த்து, உணர்ந்திருக்கிறோம்.

தேர்தலில் வெற்றிபெற்றதும் [illegible]



புதிய அமைச்சரவையை நியமிப்பதாகக் கூறும் வேட்பாளர்களின் கேலிக்கையான கருத்துகளைப் பாருங்கள். அமைச்சரவையில் தகுதியானவர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து கூட அவர்களுக்குத் தெரியாது.

இந்தத் தேர்தலில் சிறுபிள்ளைத்தனமான பலர் போட்டியிடுகிறார்கள். அவர்களுக்கு வாக்களித்து வாக்கை வீணடிக்காமல் பொருத்தமான தலைவரை [illegible] என்றார். (அ)

# மலையக மக்களின் பங்களிப்பும் சஜித்தின் வெற்றியில் வேண்டும்!

## இராதாகிருஷ்ணன் கோரிக்கை

கொழும்பு, செப். 19

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் வெற்றியில், மலையக மக்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும் என, பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் வெற்றி, நாட்டு மக்களால் உறுதி செய்ப்பட்டுள்ளதாகவும், அந்த வெற்றியில், மலையக மக்களின் பாரிய பங்களிப்பும் இருக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.



நுவரெலியா கொட்டலையில், மலையக தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் தலைமையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது, இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# எந்த நேரமும் எதுவும் நடக்கும் அச்சத்தில் அம்பாறை மக்கள்!

## காட்டு யானைகளால் காவு கொள்ளப்படும் உயிர்கள்



காரைதீவு, செப். 19

**அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பகலிலும் நடமாடும் காட்டு யானைகளால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதே வேளை, "எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்" என்ற அச்சத்தில் உயிரை கையில் பிடித்துக் கொண்டு மக்கள் வீதியில் பயணித்து வருகின்றனர்.**

அம்பாறை - காரைதீவு, நிந்தவூர் மற்றும் சம்மாந்துறை பிரதேசங்களில் மாலையிலும் இரவு வேளையிலும் மக்களுக்கு தொல்லை கொடுத்து வந்த காட்டு யானைகள் தற்போது பகல் வேளையிலும் மக்கள் நடமாட்டமுள்ள இடங்களுக்கு சர்வ சாதாரணமாக நடமாட ஆரம்பித்துள்ளன.

கூட்டமாகவும் தனியாகவும் கிராமங்களுக்குள் நுழையும் காட்டு யானைகள் குடியிருப்புகள், மதில்கள் மற்றும் பயன்தரும் தென்னை, வாழை மரங்களுக்கும் பலத்த சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன.

அண்மைக்காலமாக காட்டு யானைகளின் தாக்கத்தால் இந்தப் பிரதேசங்களில் பல உயிர்களும் காவு கொள்ளப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)




# உதைபந்தாட்ட போட்டி சமநிலையில் நிறைவு

திருகோணமலை, செப். 19

திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் ஒழுங்கமைப்பில் திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணியினருக்கும் ஹற்றன் உதைபந்தாட்ட லீக் அணியினருக்கும் இடையில் நட்பு ரீதியில் உதைபந்தாட்ட போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டி, இரு அணிகளுக்கும் 1 - 1 என்ற கோல் அடிப்படையில் சமநிலையில் நிறைவடைந்தது.

இந்தப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இரு அணியினருக்கும் கிண்ணத்தை வழங்கிக் கௌரவித்தார். (எ)



# எட்டு ஜனாதிபதிகளும் ஏமாற்றியதே வரலாறு?

கல்முனை, செப். 19

கடந்த எட்டு ஜனாதிபதிகளுக்கும் வாக்குப் போட்டு தமிழர்கள் கண்ட பலன் என்ன? எட்டு ஜனாதிபதிகளும் தமிழ் மக்களை ஏமாற்றினார்கள்-

இவ்வாறு தாயக செயலணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும், காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனை ஆதரித்து அம்பாறை, திராய்க்கேணியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. ஆனால், அத்தனையும் கிழித்தெறியப்பட்டு ஏமாற்றப்பட்டதே வரலாறு.

தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளில் புத்தர் சிலைகளை வைத்து நில ஆக்கிரமிப்பு செய்கிறார்கள். அந்த வகையில் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வாக்கு போடத்தான் வேண்டுமா? சற்று சிந்தியுங்கள். இந்த முறை யாவது சர்வதேசத்துக்கு எமது ஒற்றுமையை வெளிக்காட்டும் முகமாக சங்குக்கு வாக்களிக்க வேண்டும்"- என்றார். (எ)

# மட்டு. அமிர்தகழி மாணவிகள் தடகள போட்டியில் சாதனை

மட்டக்களப்பு, செப். 19

கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போது மட்டக்களப்பு, அமிர்தகழி சிறீ சித்தி விநாயகர் மகா வித்தியாலய மாணவி றொபேக்கா 16 வயதுக்கு உட்பட்ட 100 மீற்றர், 200 மீற்றர், 110 மீற்றர் சட்டவேலி போட்டிகளிலும், நகுலேஸ்வரன் டாரிகா 18 வயதுக்கு உட்பட்ட குண்டு போடுதல் மற்றும் தட்டெறிதல் போட்டியில் (27. 54 மீற்றர் தூரம் தட்டு எறிந்து புதிய கிழக்கு மாகாண) சாதனையுடனும் தேசியமட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் கிழக்கு மாகாண மட்ட போட்டியில் இந்தப் பாடசாலை கபடி அணியும் வெற்றியீட்டி தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகி




பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், வெற்றிக்கு பங்களிப்பு வழங்கிய விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான நிக்கோல் நிசாந்தன், திருமதி பிரதீஸ்கரன் நிரஞ்சலா, உடற்கல்வி ஆசிரியர் க. லதா ஆகியோருக்கு பாடசாலை அதிபர் வல்லிபுரம் முருகதாஸ் உள்ளிட்ட கல்விச் சமூகத்தினர் வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர். (எ)

# சம்மாந்துறையில் ஆங்கில தின போட்டி





கல்முனை, செப். 19

அம்பாறை மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டி நேற்றுப் புதன்கிழமை சம்மாந்துறை அல் - மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

சம்மாந்துறை கல்வி வலயம் ஏற்பாடு செய்த மாவட்ட மட்ட போட்டிகளின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமார் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிலோபரா, பி. பரமதயாளன், எச். நைரூஸ்கான், எம். சியாட், ஏ. பார்த்தீபன் , ஏ. றியாசா, எம். நௌபர்டீன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய நான்கு வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்ற நிகழ்வில் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. நசீர் வரவேற்புரை நிகழ்த்த வளவாளர் கே. குணரத்ன விளக்க உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து எழுத்தாக்கம் மற்றும் நாடகப் போட்டிகள் நடைபெற்றன. (எ)



# சுகாதார பாதுகாப்பு கருத்தரங்கு

கல்முனை, செப். 18

அம்பாறை மாவட்ட இலங்கை வங்கி ஓய்வூதியர் சம்மேளனம் ஒழுங்கு செய்த சுகாதார பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கு அட்டாளைச்சேனையில் நடைபெற்றது.

இந்த சம்மேளனத்தால் ஒவ்வொரு வருடமும் அம்பாறை மாவட்டத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலும் சுகாதார பாதுகாப்பு கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் படைகளின் தாக்குதலில் 11,000 மாணவர்கள் உயிரிழந்தனர்

## நாளுக்கு நாள் மோசமடையும் காஸா நிலைவரம்



ஜெருசலேம், செப். 19

**இஸ்ரேல் படைகளின் தாக்குதல்களால் காஸா மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட வெஸ்ட் பேங்கில் இதுவரை 11,000இற்கும் அதிகமான மாணவர்கள் உயிரிழந்தனர் என்று பலஸ்தீன கல்வி அமைச்சு அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளது.**

மத்திய காஸாவில் உள்ள புரேஜ் அகதிகள் முகாமில் இஸ்ரேலியப் படைகள் குண்டுவீசித் தாக்கியதில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் சிக்கியுள்ளதாக அஞ்சப்படுகிறது. போர் தொடங்கியதில் இருந்து தற்போதுவரை காஸா மீதான இஸ்ரேலின் போரில் 41 ஆயிரத்து 252 பேர் கொல்லப்பட்டனர். 95 ஆயிரத்து 497 பேர் காயமடைந்துள்ளனர். ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,139 ஆகவுள்ளது, அதேசமயம் 200இற்கும் மேற்பட்டோர் சிறைபிடிக்கப்பட்டனர். அதிலும் குறிப்பாக, கடந்த ஒக்ரோபர் 7இல் இருந்து இதுவரை காஸா பகுதி மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட வெஸ்ட் பேங்கில் 11,001 மாணவர்கள் கொல்லப்பட்டதாகவும், 17 ஆயிரத்து 772 பேர் காயமடைந்ததாகவும் பலஸ்தீன கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)



# பயங்கர காட்டுத் தீ; பெருவில் 15 பேர் பலி

லிமா, செப். 19

பெருவில் பரவிவரும் பயங்கர காட்டுத் தீயில் சிக்கி 15 பேர் உயிரிழந்தனர்.

உலகின் மிகப்பெரிய வெப்பமண்டல மழைக்காடு அமேசான். தென் அமெரிக்காவின் பிரேசில், பொலிவியா, கொலம்பியா, ஈக்குவடோர், கயானா, பெரு, சுரிநாம், வெனிசுலா, பிரெஞ்ச், கயானா ஆகிய நாடுகளில் அமேசான் காடுகள் பறந்து விரிந்துள்ளன.

ஆனாலும், இந்த காட்டுத் தீயில் இதுவரை 15 பேர் உயிரிழந்ததாக பெரு அரசு தெரிவித்துள்ளது. அமேசான் காட்டுத் தீயில் சிக்கி படுகாயமடைந்த 128 பேர் சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பியுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. (எ)



# "ரஷ்யர்களே காதலியுங்கள்"

மொஸ்கோ, செப். 19

நேரம் கிடைக்கும் போதெல்லாம் காதல் செய்யுங்கள் என்று ரஷ்யர்களுக்கு அந்த நாட்டின் ஜனாதிபதி விளாமிர் புடின் அறிவுரை வழங்கியுள்ளார்.

1990 களில் இருந்தே ரஷ்யாவில் பிறப்பு விகிதம் சரிந்து வருகிறது. இது ஒருபக்கம் என்றால் போர் உள்ளிட்ட காரணங்களால் அந்த நாட்டில் உயிரிழப்பும் அதிகரித்துள்ளது.

"உக்ரைனுடன் நடந்து வரும் போர் காரணமாக ரஷ்யாவில் மக்கள் தொகை குறைந்துள்ளது. இது தேசத்தின் எதிர்காலத்துக்கு பேரழிவு. வேலையில் மூழ்கியிருப்பது சரியான காரணம் அல்ல. இனப்பெருக்கத்துக்கு வேலை ஒரு தடையாக இருக்கக்கூடாது. வேலை செய்யும் இடத்தில் மதிய உணவு மற்றும் தேநீர் இடைவேளையின் போது என நேரம் கிடைக்கும் போதெல்லாம் காதல் செய்து குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்" - இவ்வாறு புடின் கூறியுள்ளார். (எ)

# திடீரென வெடித்து சிதறிய தொலைத் தொடர்பு கருவி

## 10 பேர் பலி, 2,750 பேர் காயம்

பெய்ரூட், செப். 19

லெபனானில் தொலைத் தொடர்பு கருவி (பேஜர்கள்) வெடித்த சம்பவத்தில் 10 பேர் பலியாகினர். மேலும் 2 ஆயிரத்து 750 பேர் காயமடைந்தனர்.

லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா போராளிகளும் இஸ்ரேல் மீது ஏவுகணை, ரொக்கெட் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதனால், இஸ்ரேலின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள லெபனானில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. ஹிஸ்புல்லா போராளிகளின் தாக்குதலால் இஸ்ரேலின் வடக்கு எல்லையில் வசித்து வந்த மக்கள் தற்காலிகமாக பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இதனிடையே, இடம்பெயர்ந்துள்ள மக்களை மீண்டும் வடக்குப்பகுதியில் குடியமர்த்துவதில் இஸ்ரேல் உறுதியாக உள்ளது. இராணுவ நடவடிக்கை மூலம் வடக்கு எல்லை பகுதியில் அமைதியை நிலைநாட்டி மக்களை குடியமர்த்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. இதனால் லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே போர் மூளும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை ஒரேநேரத்தில் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகள் பயன்படுத்தி வரும் பேஜர்கள் வெடித்தன. இதனால் ஒட்டுமொத்த லெபனானும் அச்சத்தில் உறைந்துள்ளது.

பேஜர் என்பது தகவல் தொடர்பு கருவியாகும். இந்தக் கருவியை ஹேக் செய்வது மிகவும் கடினமானது. தொலைபேசிகளை ஹேக் செய்து இருப்பிடம், தகவல்களை இஸ்ரேல் கைப்பற்றிவிடும் என்று கருதிய ஹிஸ்புல்லா போராளிகள் பேஜர்களை பயன்படுத்தி வருகின்றனர். போராளிகள் தவிர அரசு அதிகாரிகள் உட்பட மேலும் சிலரும் இந்த பேஜரை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் லெபனான் முழுவதும் பேஜர்கள் மர்மமான முறையில் வெடித்து சிதறின. இந்த சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்தனர். மேலும், 2 ஆயிரத்து 750 பேர் படுகாயமடைந்தனர். இதில், 200இற்கும் மேற்பட்டோர் உயிருக்கு ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பேஜர் வெடிப்பு சம்பவத்தின் பின்னணியில் இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# யாகி புயல் தாக்கத்தால் மியன்மாரில் 226 பேர் பலி

நேபிடோவ், செப். 19

மியன்மாரில் யாகி புயல் தாக்கத்தால் பலி எண்ணிக்கை 226 ஆக அதிகரித்தது.

தென்சீனக் கடலில் உருவான யாகி புயல் பிலிப்பைன்ஸ், தெற்கு சீனா, வியட்நாம், லாவோஸ் மற்றும் மியன்மார் உள்ளிட்ட நாடுகளை கடுமையாக தாக்கியது. இந்தப் புயலை தொடர்ந்து ஏற்பட்ட கனமழை மற்றும் அதன் தொடர்ச்சியாக, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஆகியவை ஏற்பட்டது. இதனால் மக்களின் வாழ்க்கையை சூறாவளி புரட்டிப்போட்டு சென்றது. இந்த நிலையில், மியன்மாரில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 226 ஆக அதிகரித்தது. 77 பேர் காணாமல் போயுள்ளதாக அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, யாகி புயலால் வியட்நாமில் 300 பேரும், தாய்லாந்தில் 42 பேரும், லாவோசில் 4 பேரும் உயிரிழந்ததாக தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஒருங்கிணைப்பு மையம் தெரிவித்துள்ளது. (எ)

# இராணுவ முகாம்மீது தாக்குதல்

பமாகோ, செப். 19

மாலியின் தலைநகரில் உள்ள இராணுவ பயிற்சி முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்த நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட இந்த இராணுவ பயிற்சி முகாம் பமாகோ நகரின் எல்லையில் அமைந்துள்ளது. தாக்குதல் நடத்தியவர்கள் யார்?, எத்தனை பேர்?, நிலைமை கட்டுக்குள் உள்ளதா? என்பது குறித்த உறுதியான தகவல் எதுவும் வெளியாகவில்லை.

மாலி, அதன் அண்டை நாடுகளான புர்கினா பாசோ மற்றும் நைஜருடன் சேர்ந்து, ஆயுதக் குழுக்களின் கிளர்ச்சியை எதிர்த்துப் போராடி வருகிறது. (எ)

# சீனாவின் ஷங்காயை தாக்கியது சூறாவளி!

## 4 இலட்சம் பேர் வெளியேற்றம்

பீஜிங், செப். 19

1949 ஆம் ஆண்டுக்கு பின்னர் சீனாவின் ஷங்காய் நகரத்தை திங்கட்கிழமை அதிகாலை சக்திவாய்ந்த சூறாவளி தாக்கியது. இதனைத் தொடர்ந்து கடும் காற்று வீசியதோடு, பலத்த மழையுடன் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், அங்கிருந்து 400,000 இற்கும் அதிகமானவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அத்தோடு விமானங்கள், படகுகள் மற்றும் ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

சீனாவில் மூன்று நாள் இலையுதிர்கால கொண்டாட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஷங்காய்க்கு தென்மேற்கே 170 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியதால் ஞாயிற்றுக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை 180 இற்கும் மேற்பட்ட விமானங்களை இரத்து செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

60,000 இற்கும் மேற்பட்ட அவசர உதவியாளர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்கள் ஷங்காயில் உதவி வழங்கத் தயாராக உள்ளதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த மாத தொடக்கத்தில் சீனாவின் தெற்கு ஹைனான் தீவை தாக்கிய யாகி சூறாவளி தென்கிழக்கு ஆசியாவில் பேரழிவை ஏற்படுத்தியது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3 யாழ். வாசிகள் படகுடன் கைது!

## கடத்தலின்போது நடுக்கடலில் படகு பழுதா? இந்திய கடலோரக் காவல் படை விசாரணை

சென்னை, செப். 19

**தொண்டி கடற்பரப்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவரை படகுடன் கைது செய்த இந்திய கடலோர காவல் படை அதிகாரிகள் மற்றும் உளவுத்துறை நடத்திய விசாரணையில் கஞ்சா அடங்கிய மூட்டைகளை நடுக்கடலில் வைத்து சட்டவிரோதமாக தமிழகத்தை சேர்ந்த கடத்தல்காரர்களிடம் இருந்து வாங்கிச் செல்லக் காத்திருந்தபோது நடுக்கடலில் படகு பழுதாகி நின்றதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.**

இராமநாதபுரம், தொண்டி கடற்பரப்பில் சந்தேகத்திற்கு இடமாக நின்றுகொண்டிருந்த ஒரு இலங்கைப் படகையும் அதிலிருந்த மூன்று இலங்கை மீனவர்களைக் கைது செய்த இந்திய கடலோர காவல் படையினர் மண்டபம் முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

நடுக்கடலில் மீனவர்களிடம் நடத்திய முதல் கட்ட விசாரணையில் காற்றின் வேகம் காரணமாக திசை மாறி இந்திய கடல் பரப்புக்குள் வந்ததாக தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்திய கடலோரக் காவல்படை மண்டபம் முகாமில் வைத்து மீனவர்களிடம் முழுமையான விசாரணைக்கு பின்னர் மீனவர்கள் சட்ட விரோத நடவடிக்கை ஈடுபடுவதற்காக இந்திய கடல் பகுதியில் வந்தார்களா அல்லது எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்பது தெரியவரும் என இந்திய கடலோர காவல் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே இராமநாதபுரம் மாவட்ட உளவுத்துறை அதிகாரிகள் இலங்கை உளவுத்துறையினரிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்கள் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நிரோஜன் என்பவருக்குச் சொந்தமான படகில் உடுத்துத்துறை பகுதியைச் சேர்ந்த நிரோஜன், திபாகரன் உள்ளிட்ட மூவர் படகில் உள்ள பிடிபட்டுள்ள நிலையில் படகில் உள்ள ஒருவரான திபாகரன் முக்கிய கஞ்ச கடத்தல்காரர் என்பது தெரிய வந்துள்ளது.

மேலும், தொண்டி அடுத்த மணல்மேல்குடியை சேர்ந்த மர்ம நபர்களிடம் இருந்து கஞ்சா மூடைகள் வாங்கிச் செல்லவதற்காக தொண்டியில் இருந்து சுமார் 15 கடல் மைல் தூரம் நடுக்கடலில் காத்திருந்தபோது திடீரென படகு இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதால் படகுடன் இந்திய கடற்பரப்பில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்த போது இந்திய கடலோர காவல் படை அவர்களைக் கைது செய்துள்ளது.

இலங்கையர்கள் மூவரிடமும் செல்போன்களை பறிமுதல் செய்து அதன் அடிப்படையில் தமிழகத்தைச் சேர்ந்த கடத்தல்காரர்கள் யார் இவர்களுக்கு கஞ்சா வழங்க இருந்தார்கள் என்பது குறித்து முழுமையாக விசாரிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

தற்போது கைது செய்யப்பட்டவர்களிடம் கஞ்சா மூடைகள் கைப்பற்றப்படவில்லை எனவும் விசாரணைக்கு பின்னர் இவர்கள் மூவரும் மண்டபம் மரைன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றம் ஊடாக புழல் சிறையில் அடைக்கப்படுவார்கள் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# தேர்தல் சுவரொட்டிகளை நீக்கும் பணியில் பொலிஸ்!

வவுனியா, செப். 19

வவுனியாவில் தேர்தல் சுவரொட்டிகளை நீக்கும் பணியில் பொலிஸார் நேற்று ஈடுபட்டனர்.

எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பான பிரசாரத்துக்கான இறுதி நாள் நேற்றாகும். நேற்றிலிருந்து தேர்தல் மற்றும் வேட்பாளர்கள் தொடர்பான பாதைகள் சுவரொட்டிகளை காட்சிப்படுத்துவது தேர்தல் சட்ட விதிமுறை மீறல் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் வவுனியாவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஒன்பதாயிரத்துக்கும் அதிக பதாதைகள் மற்றும் சுவரொட்டிகளை நீக்கும் பணியில் வவுனியா பொலிஸார் ஈடுபட்டனர்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயக்கொடி தலைமையிலான 20 இற்கும் மேற்பட்ட பொலிஸார் குறித்த பணியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 40 அத்தியாவசிய மருந்து வகைகள் வைத்தியசாலைகளில் தட்டுப்பாடு!

கொழும்பு, செப். 19

வைத்தியசாலைகளுக்கு தேவையான 40 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் இந்த நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் சுமார் 300 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்பட்ட போதிலும் இதுவரை அவை விநியோகிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலைமையின் அடிப்படையில், வெளிப்படையான முறையில் கடுமையான விதிமுறைகளுக்கு உட்பட்டு, நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தொடர்ந்தும் வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் வழங்கப்படும் என சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்தார். (அ)

# ரயில்வே சேவை பாதிப்பு

கொழும்பு, செப். 19

ரயில் தடம்புரண்டதன் காரணமாக, களனிவெளி மார்க்கத்தில் செல்லும் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிருலப்பனை பகுதியில் தண்டவாள பராமரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட ரயில் ஒன்றே இவ்வாறு தடம் புரண்டதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே, களனிவெளி மார்க்கத்தில் செல்லும் பயணிகள் ரயில் சேவைகளில் தாமதம் ஏற்பட்டதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டது. (அ)

# 1.4 மில்லியன் ரூபாய் கப்பம் வசூலித்த 4 பொலிஸார் கைது!

கொழும்பு, செப். 19

கொழும்பு 15 இல் உள்ள குடியிருப்பு ஒன்றிற்குள் நுழைந்து அதில் வசிப்பவர்களை அச்சுறுத்தி 1.4 மில்லியன் ரூபாவை கப்பம் பெற்ற குற்றச்சாட்டில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் முகத்துவாரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, புளூமெண்டல் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு கான்ஸ்டபிள்கள் மற்றும் சார்ஜன்ட் ஒருவரும், கொழும்பு வடக்கு புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை முகத்துவாரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மலையக மக்களுக்கான கோரிக்கைகளை உள்ளடக்கிய மலையக சாசனம் வெளியீடு

கொழும்பு, செப். 19

மலையக மக்களுக்கான 14 அம்ச கோரிக்கைகளை உள்ளடக்கிய மலையக சாசனம் நேற்று வெளியிடப்பட்டது.

நுவரெலியாவில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற நிகழ்வில் மலையக சாசனம் மாலை வெளியிடப்பட்டது.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நுவரெலியாவிலுள்ள தனியார் விடுதியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பேராசிரியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், சிவில் அமைப்பினர், வர்த்தகர்கள், துறைசார் ஆர்வலர்கள், துறைசார் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் கலந்துக்கொண்டிருந்தனர்.

இந்த மலையக சாசனத்தில் பங்களிப்புகளின் அங்கீகாரம், நிலம் மற்றும் வீடு, வேலை வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம், முழு குடியுரிமைக்கான அங்கீகாரம் மற்றும் பிரகடனம் உள்ளிட்ட 14 அம்சக் கோரிக்கைகள் இந்த மலையக சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# மறைந்த வேட்பாளருக்கு அளிக்கப்படும் வாக்குகள் செல்லுபடியற்றவையாகும்!

கொழும்பு, செப். 18

மரணத்தை தழுவிய ஜனாதிபதி வேட்பாளர் மொஹம்மட் இல்யாஸுக்கு அளிக்கப்படுகின்ற வாக்குகளை செல்லுபடியற்ற வாக்குகளாக கருதுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.




ஐட்ரூஸ் மொஹம்மட் இல்யாஸ் மரணித்ததன் பின்னர் அவர் சார்பில் வேறு ஒரு வேட்பாளரின் பெயரை முன்மொழியுமாறு குறித்த வேட்பாளரை சார்ந்தோருக்கு அறிவிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அந்த அறிவிப்புக்கு அவர்கள் பதிலளிக்கவில்லை.

அதற்கமைய வாக்கெடுப்பு தொடர்பான ஆவணங்களிலிருந்தும் வாக்குச் சீட்டிலிருந்தும் ஐட்ரூஸ் மொஹம்மட் இல்யாஸின் பெயர் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# புலமைப்பரிசில் வினாத்தாள் கசிவு; கல்வி அமைச்சு விசேட விசாரணை

கொழும்பு, செப். 19

நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் சமூக ஊடகங்களில் பரவியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் நேற்று முன் தினம் விசேட விசாரணை நடத்தப்பட்டதாகவும், பரீட்சை இரத்து செய்யப்பட மாட்டாது எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

இந்த ஆண்டு புலமைப்பரிசில் வினாத்தாளில் இருந்து மூன்று வினாக்களை நீக்கி அனைத்து மாணவர்களுக்கும் அந்த மூன்று வினாக்களின் மதிப்பெண்களை சமமாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் குறித்த வினாத்தாள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டதாக இதுவரை தெரியவரவில்லை.

இந்த சம்பவம் தொடர்பில், நேற்று முன் தினம் காலை வினாத்தாளை தயாரித்த அதிகாரிகள் சபையுடன் நீண்ட நேரம் கலந்துரையாடியதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமந்தை...

உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, மோட்டார் சைக்கிளில் வந்தவர் ஓமந்தை - பன்றிக்கெய்த குளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி சென்றுள்ளார். ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அண்மையாக வீதியில் நின்றவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவரும் படுகாயமடைந்தனர்.

இருவரும் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது, இருவரும் ஏற்கனவே உயிரிழந்து விட்டனர் என்று அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## அச்சுறுத்தல்...

பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இருந்தாலும் எனக்கு தற்போது பிரமுகர் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த இருவரை பாதுகாப்புக்கு தந்துள்ளார்கள்.

பொது வேட்பாளராக நான் போட்டியிடுவதால் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் போன்றவர்கள் அதிருப்தியில் இருக்கின்றனர் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்காக அவர்களால் எனக்கு ஆபத்து வரும் என நான் நம்பவில்லை என்னை வேட்பாளரில் இருந்து விலகுமாறு யாரும் என்னிடம் நேரில் கேட்கவில்லை. எனக்கு அந்தவிதமான அழுத்தங்களையும் தரவில்லை. நான் போட்டியிடுவதால் சிலருக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். அதற்காக யாரும் எனக்கு அச்சுறுத்தல் விடுக்கவோ, அழுத்தம் தரவோ இல்லை - என்றார். (அ)

## 20 இலட்சம்...

புலனாய்வுத் துறை அறிக்கையின் பிரகாரம் 20 இலட்சம் மேலதிக வாக்குகளால் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெறும் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் கூறினார்.

மொனராகலையில் நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனது காலை வாருகின்ற ரணில் - அநுர ஜோடி வாக்கு சதவீதத்தில் கீழ் மட்டத்திலே இருக்கின்றது. புனித தலதா மாளிகையில் தேர்தல் விஞ்ஞாபனத்தை முதன்முதலில் சமர்ப்பித்து ஆசிர்வாதத்தை பெற்றுக் கொண்ட பின்னரே நாம் தேர்தல் பணிகளை ஆரம்பித்தோம்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அனைத்தையும் புத்த பெருமானின் ஆசீர்வாதங்கள் பாதுகாக்கும் என்பதோடு நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம். இந்த வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வன்முறை என்பது ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையல்ல. எனவே, மாற்றுக் கொள்கையோடு இருக்கின்ற எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த நாட்டை கட்டி எழுப்புகின்ற பயணத்தில் அனைவரையும் பங்காளர்களாக இணைத்துக் கொள்வோம்.

மத சுதந்திரத்தை கௌரவப்படுத்துவதோடு, பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் ஆகிய மதங்களை பின்பற்றுவதற்கு எவருக்கும் உரிமை இருப்பதனால், அந்த உரிமை பாதுகாக்கப்படும்.

அதிகாரத்திற்கு வந்து ஆறு மாதங்களுக்குள் போதைப்பொருள் விநியோகத்தை நிறுத்துவதற்கு தேவையான அதிகபட்ச தீர்மானங்களை எடுத்து, போதைப் பொருள் மாபியாவை நிறைவுக்கு கொண்டு வருவோம்.

மக்கள் விடுதலை முன்னணியினர், பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினர் இறுதித் தருணத்தில் உங்கள் வாக்குகளை வீணடிக்காமல் தொலைபேசிக்கு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் -என்றார். (அ)

## தமிழ் அரசின் பிரசாரங்களுக்குள்...

மக்கள் மத்தியில் நிலவும் குழப்பங்களை போக்கும் முகமாக, இந்த அறிக்கையை வெளியிடுகின்றோம்.

தமிழ் மக்களின் ஒன்றுபட்ட ஜனநாயக பலத்தை காண்பிக்கும் நோக்கிலும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வானது இப்போதும், ஓர் எரியும் பிரச்னையாகவே இருக்கின்றது - என்பதை ஆணித்தரமாக பதிவுசெய்யும் நோக்கிலேயே தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் வரலாற்றில் முதன்முறையாக நிறுத்தப்பட்டிருக்கின்றார். ஆனால், இந்த முயற்சியை சீர்குலைக்கும் நோக்கில் இலங்கை தமிழ் அரசு கட்சி ஒரு தீர்மானத்தை வெளியிட்டிருப்பதுடன் தற்போது, தேர்தல் பிரசாரங்கள் நிறைவுறும் வேளையில் குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்குமாறு பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றது.

திருகோணமலையில் பல பகுதிகளிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி என்று பெயர் குறிப்பிட்டு, சஜித் பிரேமதாஸவை ஆதரிக்குமாறு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. தமிழ் பொது வேட்பாளரின் சங்கு சின்னத்தை நோக்கி திருகோணமலை தமிழ் மக்கள் அணி திரண்டுவரும் சூழலை குழப்பும் நோக்கிலேயே இவ்வாறான நடவடிக்கைகளை தமிழ் அரசு கட்சியின் ஒரு பிரிவினர் முன்னெடுத்துவருகின்றனர். இது தொடர்பில் தமிழ் மக்களை விழிப்பாக இருக்குமாறு தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைபின் சாப்பில் கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கை தமிழ் அரசு கட்சியானது, தமிழ்த் தேசிய அரசியலை சிதைக்கும் நோக்கம் கொண்டவர்களின் பிடிக்குள் சிக்கிவிட்டது. இனி அதனை மீட்பது கடினம் என்றே தெரிகின்றது. அதே வளை, பெரிய கட்சியென்று கூறக் கூடிய தகுதிநிலையையும் தமிழ் அரசு கட்சி முற்றிலுமாக இழுந்துவிட்டது. தமிழ் அரசு கட்சிக்குள் இருக்கும் தமிழ் உணர்வாளர்கள், தமிழ்த் தேசிய கொள்கைப் பற்றாளர்கள் அனைவரும் வெளியேறி, பொருத்தமான மாற்று நடவடிக்கை தொடர்பில் சிந்திக்க வேண்டிய நிலையே தற்போது ஏற்பட்டிருக்கின்றது.

தமிழ் அரசு கட்சி சொல்வதைக் கேட்கக் கூடிய நிலையில் தமிழ் மக்கள் இல்லையென்றாலும் கூட, தமிழ் அரசு கட்சி என்னும் பெயரில் வெளிவரும் குழப்பகரமான அறிக்கைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்களை கண்டு, நீங்கள் தடுமாறிவிடக்கூடாது என்பதை வலியுறுத்தும் நோக்கிலேயே நாம் இதனை வெளிப்படுத்துகின்றோம்.

தேர்தலுக்கு முன்னர் தமிழ்ப் பொது வேட்பாளரின் செல்வாக்கை சரிக்கும் நோக்கில் பலவாறான குழப்பகரமான நடவடிக்கைகளில் தமிழ் அரசு கட்சியின் ஒரு பிரிவினர் ஈடுபடுவதற்கான அதிக வாய்ப்பு உண்டு என்பதையும் ஒரு முன்னெச்சரிக்கையாக கூறி வைக்கின்றோம். ஏனெனில், இன்றைய நிலையில் எந்தவொரு தரப்புக்கும் இல்லாத அளவுக்கு சங்குச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் என்னும் அடையாளத்தை பலவீனப்படுத்த வேண்டும் என்னும் வெறியோடு, சுமந்திரன் தலைமையிலான தமிழ் அரசு கட்சியினர் செயல்பட்டுவருகின்றனர். இதற்கு தமிழ் அரசு கட்சியின் மத்திய குழுவிலுள்ள பலரும் துணைபோயிருக்கின்றனர். இவற்றை கருத்தில்கொண்டு கவனத்தை சிதறவிடாமல், தங்களின் வாக்குகளை பயன்படுத்துமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## சங்கு சின்னத்து...

ஊடக சந்திப்பின்போதே அவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களியுங்கள். சிலர் விருப்பு வாக்குகளை ஏனைய வேட்பாளர்களுக்கு அளிக்குமாறு கூறுகின்றார்கள். அவ்வாறு செய்யாது தனியே தமிழ் பொது வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களியுங்கள். அதான் ஒவ்வொரு தமிழ் மக்களின் வரலாற்று கடமையாகும்.

கடந்த 23ஆம் திகதி "நமக்காக நாம்" என்ற பிரசார பணியை நாம் யாழ்ப்பாணத்தில் பொலிகண்டியில் ஆரம்பித்து, எட்டு மாவட்டங்களிலும் பிரசார பணிகளை முன்னெடுத்தோம். அதனூடாக மக்கள் மத்தியில் பொது வேட்பாளருக்கான வரவேற்பு அதிகரித்துள்ளது.

வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகள் இன்றைய தினம்(நேற்று) நள்ளிரவுடன் முடிவுக்கு வருகின்றது. அதன் பின்னர் பொது வேட்பாளர் பற்றி வதந்திகளை பொய்யான தகவல்களை பரப்ப சிலர் திட்டமிட்டுள்ளனர் என எமக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஏ. ஐ. தொழிநுட்பத்தை பயன்படுத்தி பொய்த் தகவல்களை பரப்ப உள்ளதாக அறிகிறோம். எனவே மக்கள் விழிப்பாக இருந்து 21ஆம் திகதி காலை வேளையே வாக்குச் சாவடிகளை சென்று சங்கு சின்னத்துக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றார். (அ)

## எம் உரிமைகளை...

நேற்று சாவகச்சேரியில் அமைந்துள்ள அவருடைய வீட்டில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரிந்து கிடக்கும் எமது தமிழ்த் தேச உறவுகளை ஒன்றுபடுத்தி ஒரே தேசமாக திரட்டுவதற்கான களமாக இந்த ஜனாதிபதித் தேர்தல் எமக்கு அமைந்துள்ளது.

அதனை உணர்ந்து தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பு உருவாக்கமும், அதன் ஊடாக அரியநேத்திரன் தமிழ்ப் பொது வேட்பாளராக களம் இறங்கியுள்ளதனையும் நாம் அறிவோம்.

அந்த விதத்தில் கடந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டும், மறுபுறத்தில் எமது தமிழ்த் தேசத்தைப் பலமாக்கி எமது உரிமைகளை வலுவுள்ளதாக மாற்றுவதற்கும் இந்தத் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டியது அனைவரதும் கடமையாக இருக்கின்றது.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது எதிர்ப்பு அரசியல் அல்ல. இலங்கை ஒரு பன்முக நாடு. அந்த வகையில் ஒன்றிணைத்துச் செயல்படுத்துவதென்பது சமத்துவமான உரிமைகளை வழங்கப்படுகின்றபோதே சாத்தியமாகின்றது.

எமது உரிமைகளை வலுவுள்ளதாக்கவும், நாம் பலமுள்ளவர்களாக நிற்கிறோம் என்பதனை உரத்துச் சொல்வதற்கும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது அவசியமானதொன்றாகும்.

இந்த வேளையில் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பில் உள்ள சில அரசியல் தலைவர்கள் தொடர்பான விமர்சனங்கள், ஐயங்கள் இருக்கவே செய்கின்றன.

இருப்பினும், அது தொடர்பாக கதைப்பதற்கும் கருத்துச் சொல்வதற்கும் இது உகந்த நேரம் அல்ல. அதற்குரிய காலம் கனிந்து வரும். இவை எல்லாவற்றையும் மறந்து எங்களுடைய தமிழ்த் தேசத்தினுடைய தலைவர்கள் என்று சொல்பவர்கள் தமிழ் மக்களை குழப்ப நிலைக்கு உள்ளாக்கியுள்ளனர்.

அந்தக் குழப்ப நிலை எல்லாவற்றுக்கும் தமிழ் மக்கள் நிச்சயமாக தமிழ்த் தேசமாக ஒன்றிணைந்து தமிழ் மக்களுடைய உரிமைகளுக்காக போராடக் கூடிய பலத்தைச் சேர்ப்பதற்காக தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும். அவருடைய சங்கு சின்னத்திற்கு நேரே புள்ளடி இட வேண்டும்- என்றார். (அ)

## செப்ரெம்பர் 21...

அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டின் நலனுக்காக 2022 ஆம் ஆண்டு முன்னேறியதாகவும், மக்களுடன் இணைந்து நாட்டின் இளைஞர்களுக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்கும் தனது பொறுப்பை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் கூறினார்.

நேற்று கொழும்பு கிராண்ட்பாஸில் நடைபெற்ற "இயலும் இலங்கை" இறுதிக் கூட்டத்தில் ஜனாதிபதி விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார். அத்துடன், நேற்று இரவு ஒளிபரப்பான தொலைக்காட்சி பேட்டிகளிலும் அவர் இதனை எடுத்துரைத்தார்.

அங்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி,

நாடு மீண்டும் வங்குரோத்து நிலையை எதிர்கொள்வதைத் தடுக்கும் ஸ்திரமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான மக்களின் ஆணையை தான் நாடுவதாக வலியுறுத்தினார். பொருளாதார ஸ்திரமின்மைக்கு காரணமான சஜித் மற்றும் அநுரவின் தோல்வியடைந்த கொள்கைகளை செப்ரெம்பர் 21 ஆம் திகதி மக்கள் நிராகரிப்பார்கள். டைட்டானிக் கப்பலைப் போல மூழ்கிக் கொண்டிருந்த நாட்டின் பொருளாதாரத்தை இன்று சரியான பாதையில் கொண்டு சென்றுள்ளோம். கப்பல் துறைமுகத்திற்கு வரும் போது கப்டனை மாற்றி, அதன் பயணத்தை மாற்றுவதா என்பதை மக்கள் முடிவு செய்ய வேண்டும். புதிதாக சிந்தித்து முன்னேற வேண்டும். இந்த நாட்டு மக்களுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. எனவே 2022 இல் இருந்த நிலைமைக்கு மீண்டும் திரும்ப முடியாது. எனவே, இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான ஆணையை செப்ரெம்பர் 21ஆம் திகதி தருமாறு மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

சஜித்தாலும் அநுரவாலும் இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. அதை இதுவரை நிரூபித்திருக்கிறார்கள். எனவே, நாம் ஒரு நாடாக முன்னோக்கி செல்வதா அல்லது 2022இல் இருந்த நிலைக்கு மீண்டும் செல்வதா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். வலுவான பொருளாதாரம் கொண்ட நாடாக முன்னேற செப்ரெம்பர் 21ஆம் திகதி காஸ் சிலிண்டருக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்-என்றார். (அ)

## வங்குரோத்து...

மாத்தறையில் நேற்று இடம்பெற்ற 'ரணிலால் இயலும்' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது என்ற செய்தியை செப்ரெம்பர் 21 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைவதாகவும் குறிப்பிட்டார். (அ)

## தமிழ் பொது...

வாக்களிக்க முடியாது.

தமிழ் பொதுவேட்பாளருக்கு மட்டும் சங்கு சின்னத்துக்கு வாக்கு அளிப்பதன் மூலம் தமிழர் தேசம் என்றுமே சிங்கள ஆட்சி அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற செய்தியை வெளி உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும்.

இரண்டாம் விருப்பு வாக்கு என்ற விடயத்தை தமிழர்கள் முற்றாக புறந்தள்ள வேண்டும் - என்றுள்ளது. (அ-02)

## வாக்களித்தவுடன்...

எடுக்கப்படும் என தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க எச்சரித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு கைபேசிகளை எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. வாக்களித்த பின்னர் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதை பகிரங்கமாகச் சொன்னால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தயார் நிலையில் உள்ளன - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பரீட்சை திணைக்களம் முன்பாக ஆர்ப்பாட்டம்!

## கலகத் தடுப்புப் பிரிவினர் குவிப்பு



கொழும்பு, செப். 19

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளில் இருந்து 03 வினாக்களை நீக்கி இறுதி புள்ளிகளை கணக்கிடுவதற்காக பரீட்சை திணைக்களம் எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பெற்றோர்கள், பரீட்சை திணைக்களத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இரத்து செய்யுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்ததுடன் பெற்றோர்கள் சிலர், பரீட்சை திணைக்களத்துக்குள் சென்று கடிதம் ஒன்றையும் வழங்கினர்.

பெற்றோர்கள் தொடர்ந்தும் போராட்டம் நடத்தியதால் பொலிஸாரும் கலகத் தடுப்புப் பிரிவினரும் அந்த இடத்தில் குவிக்கப்பட்டனர்.

எவ்வாறாயினும் வினாத்தாள் தயாரித்த குழுவின் இணக்கப்பாட்டுடன் தொடர்புடைய 3 வினாக்களை நீக்கி இறுதி புள்ளிகளை வழங்க பரீட்சை திணைக்களம் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேசிய மக்கள் சக்தியால் ஆட்சிக்கு வர முடியாது!

## மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை

கொழும்பு, செப். 19

தேசிய மக்கள் சக்தியால் இந்த நாட்டில் ஒருபோதும் ஆட்சிக்கு வர முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

செம்மறி ஆட்டுத்தோல் அணிந்து வரும் குழுக்களால் மக்கள் ஏமாற மாட்டார்கள் எனவும் அவர் கூறினார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய வழங்கிய நேர்காணலிலேயே மகிந்த இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தி நாடு முழுவதும் அலுவலகங்களை அமைத்தாலும் அவர்களால் ஆட்சிக்கு வர முடியாது. அலுவலகங்களைத் தவிர மக்களின் வாக்குகளால் தேசிய மக்கள் சக்தி தேர்தலில் வெற்றி பெற முடியாது.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அநுரகுமார திஸநாயக்கவுக்கும் இடையில் பெரும் நல்லுறவு காணப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டை ஆள முடியாது - என்றார். (அ)

# அரியநேத்திரனுக்கு பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு, செப். 19

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொது வேட்பாளரின் பாதுகாப்பு தொடர்பாக, அண்மையில் பிரதிப் பொலிஸ் மா அதிபரால் விடுக்கப்பட்ட எச்சரிக்கைக்கமையவே பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை பாதுகாப்பு பிரிவை சேர்ந்த இருவர் நேற்று முதல் பாதுகாப்பை வழங்கி வருகின்றனர். அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவின் 9 பேர் பாதுகாப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் அரியநேத்திரன் இருவரை மாத்திரம் கோரினார் என்று கூறப்பட்டது. (அ)

# தமிழ் அரசு கட்சிக்குள் என்ன நடக்கிறது? மக்கள்தான் புரிந்து கொள்ளவேண்டும்

## கூறுகின்றார் சி.வீ.கே சிவஞானம்




யாழ்ப்பாணம், செப். 19

**இலங்கை தமிழ் அரசுக் கட்சி கட்சியாகவே இருக்கிறது. கட்சிக்குள் என்ன நடக்கிறது என்பதை மக்கள்தான் புரிந்து கொள்ள வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் துணை தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் அரசுக் கட்சி கட்டுக்கோப்பான கட்சி. அதை யாரும் மாற்ற முடியாது. தேர்தல் காலத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துகளை முன்வைப்பார்கள். கட்சி கூடி முடிவை அறிவிக்கும். அது கட்சியின் முடிவு. இதன் பின்னர் பலரும் பல சந்திப்புகளை செய்வார்கள். அதன் பின்னர் சில முடிவுகளை தனிநபர்கள் எடுக்கும் நிலை உருவாகிறது. அவ்வாறே இந்தத் தேர்தல் நேரத்தில் இடம்பெற்றுள்ளது.

இத்தகைய நிலையில் யாருக்கு யார் ஒழுக்காற்று நடவடிக்கைள் எடுப்பது? தலைவருக்கு எதிராக எடுப்பதா? கட்சியைப் பொறுத்தவரை கட்சியில் ஒவ்வொருவரையும் பலர் சந்திப்பார்கள். தமக்கு ஆதரவு தருமாறு கேட்பார்கள். கட்சிக்குள் என்ன நடக்கிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

தமிழ் அரசுக் கட்சிக்கு கொள்கை இருக்கிறது. அது நிலையாக இருக்கும். சுமந்திரன் மீதும் தவறு இருக்கும். அதை பேசிக்கொள்ளலாம்.

கட்சி நிலையாக இருக்கும். கருத்து சொல்வதற்கு சுதந்திரம் உள்ளது. அதற்காக எல்லோருக்கும் அந்தச் சுதந்திரம் இல்லை. தற்போது ஜனாதிபதித் தேர்தலே நடைபெறவுள்ளது. அடுத்து வரும் காலத்தில் பல்வேறு தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அந்த நேரத்தில் பலரும் வருவார்கள். அந்த நேரத்தில் நாம் முடிவுகளை எடுப்போம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதே எமது விருப்பம். ஆனால் இனி அது கனவாகவே இருக்கும் என்பதே எனது கருத்தாகவுள்ளது-என்றார். (அ)

# காங்கேசன்துறையில் சிமெந்து ஆலையை மீள இயக்குவது குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 19

காங்கேசன்துறையில் சிமெந்து தொழிற்சாலையை இயக்குவது தொடர்பான ஆரம்ப கட்ட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், முதலீட்டு ஊக்குவிப்பு சபையின் யாழ். பிராந்திய சிரேஷ்ட பிரதி பணிப்பாளர் எ. ஆர். ஜெயமனோன், ஆய்வு நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உள்ளூர் மூலப்பொருட்களை பயன்படுத்தாது, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களை கொண்டு சிமெந்து தயாரித்து பொதி செய்து உள்நாட்டு தேவைக்காக விற்பனை செய்யும் நோக்குடன் இந்த செயல் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக, காங்கேசன்துறையில் சிமெந்து தொழிற்சாலைக்கான முதலீட்டை மேற்கொள்ளவுள்ள ஆய்வு நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆளுநரிடம் தெரிவித்தனர். இந்திய முதலீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள சிமெந்து தொழிற்சாலையில் அதிநவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் எனவும், இதனூடாக உள்ளூர் மக்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படும் எனவும் ஆய்வு நிறுவனத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டதாக ஆளுநரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நிதி மூலம், தொழிற்சாலையை நிறுவுவதற்கான காணி கோரிக்கை, மூலப்பொருட்களின் இறக்குமதி, விற்பனை செயல்பாடுகள், செயல்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான கால எல்லை, சுற்றாடல் அறிக்கை உள்ளிட்ட அனைத்து விடயங்களும் அடங்கிய முழுமையான முன்மொழிவு திட்டத்தை விரைவாக சமர்பிக்குமாறு ஆளுநர் அறிவித்துள்ளார். (அ)

# சஜித்தின் ஆதரவாளர்களை அச்சுறுத்தினாரா விஜயகலா?

## ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 19

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பிரசாரப் பணிகளில் ஈடுபட்ட தன்னையும் ஆதரவாளர்களையும் முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அச்சுறுத்தும் வகையில் செய்யப்பட்டார் என ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளர் சதாசிவம் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை பகுதியில் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டோம். மதியம் மர நிழலில் உணவு அருந்துவதற்காக இளைப்பாறிய நிலையில் அவ்வழியாக காரில் வந்த முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தன்னுடன் வந்தவர்களுக்கு ரணில் விக்கிரமசிங்கவின் பிரசாரத் துண்டுகளை வழங்கினார்.

அப்போது நாங்கள் ஏன் இங்கு நிற்கிறோம் என்பது தொடர்பில் அவருக்கு தெரியப்படுத்திய நிலையில், கோபமடைந்த விஜயகலா எமது வேட்பாளரை கீழ்த்தரமாக பேசியதுடன் நான் வழங்கிய வேலை வாய்ப்பை அவர் நிறுத்தியதாக எம்முடன் முரண்பட்டார்.

அதுமட்டுமல்லாது என்னுடன் வந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு தான் பெற்று தருவதாகவும் சஜித் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

இதன்போது ஒரு வேட்பாளரை ஆதரித்து பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஜனநாயக உரிமை. அதனை நீங்கள் எங்களுக்கு கூறவேண்டிய தேவை இல்லை என நான் கூறினேன்.

அதன்பின் நான் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசி மூலமாக நடந்த விவரங்களை தெரிவித்த நிலையில், கோபமடைந்த விஜயகலா சிங்கள மொழியில் என்னை தரகுறைவாக பேசியதுடன் என்னை ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது என கூறிவிட்டு சென்றார்-என்றார். (அ)

# பேருந்து மோதி மாணவி மரணம்

கல்முனை, செப். 19

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் தரம் 9 இல் கல்வி கற்று வந்த 14 வயது மாணவி வாகன விபத்தில் சிக்கி பரிதாபகரமாக பலியானார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை காலை காரைதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளியில் இடம்பெற்றது.

அம்பாறை - கல்முனை வீதியில் மாவடிப்பள்ளி பெரியபள்ளி வாசலுக்கு முன்பாக காலை 08.15 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் மாணவி சம்பவ இடத்திலேயே பலியானார்.

மோட்டார் சைக்கிளில் தந்தையுடன் பயணித்துக் கொண்டிருந்த மாணவியின் மீது தனியார் பேருந்து மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிய வந்தது.

இந்த விபத்து நிகழ்ந்தவுடன் குறித்த பேருந்தின் சாரதி விபத்து நடந்த இடத்திலிருந்து தப்பியோடியுள்ளார் என்றும் இந்த நிலையில் தற்போது பேருந்து சாரதி காரைதீவு பொலிஸில் சரணடைந்துள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது.

இந்த விபத்து தொடர்பில் காரைதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org